பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆவணி 21 வியாழக்கிழமை (06-09-2001) தொலைபேசி: 3378 ஒலி: 269

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
[கி-2127]

### அரசியல் நெருக்கடிக்கு ஆப்பு

# பொ.ஐ. முன்னணி-ஜே.வி.பி நேற்று உடன்படிக்கையில் கைச்சாத்து

## டி. எம். ஜயரட்ன, ரில்வின்சில்வா கையொப்பமிட்டனர்

(நமது நிருபர்)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசிற்கும், மக்கள் விடுதலை முன்னணி (ஜே. வி. பி) க்குமிடையிலான தகுதிகாண் அரசு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று பிற்பகல் 2மணி 16நிமிடம் முதல் 2மணி 18நிமிடம் வரையான இரு நிமிட சுபநேரத்தில் மதத்தலைவர்கள் முன்னிலையில் கைச்சாத்தானது.

அலரிமாளிகையில் இடம்பெற்ற இந்நிகழ்ச்சியின் போது அரசின் சார்பில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளரும், அமைச்சருமான டி. எம். ஜெயரட்னாவும், ஜே. வி. பியின் சார்பில் அதன் செயலாளர் ரில்வின்சில்வாவும் கையொப்பமிட்டனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானதை அடுத்து இரண்டு மாதங்களுக்கு மேலாக நாட்டில் நிலவிய ஸ்திரமற்ற அரசியல் நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் புரிந்துணர்வுஒப்பந்தம் கைச்சாத்தாகும் என்று அரசு குறிப்பிட்டிருந்த போதும் இறுதிநேரத்தில் சோதிடர்களின் ஆலோசனையின்படி பிரதமர் உத்தியோக பூர்வ வாசஸ்தலமான அலரி மாளிகையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

நிறைவேற்றுஅதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்பட்டு பாராளுமன்றதுக்கு அதிகாரம் வழங்குதல்

விகிதாசார முறைத் தேர்தல் ஒழிக்கப்படட்டு புதியதேர்தல் முறையை கொண்டு வருதல், காபந்துஅரசு அமைக்கப்பட்டு பொதுத்தேர்தல் நடத்துதல் போன்ற முக்கியமான அரசாங்ககாலத்தில் யுத்தநிறுத்தம் செய்வது மற்றும் அதிகாரப்பரவலாக்கம் தொடர்பான முயற்சிகளோடு தனியார்மயப்படுத்த லோகூடாதென்றும், நாட்டுக்கு பாதகத்தைஏற்படுத்தக்கூடியதாக நாணய நிதியம் எவற்றுடனும் ஒப்பந்தம் கைச்சாத்திடக்கூடாதெனவும் இவ்உடன்படிக்கையில் நிபந்தனைகள் விதிக்கப்பட்டு இருதரப்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

பண்டார நாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் மங்களவிளக்கேற்றிசம்

(8ம் பக்கம் பார்க்க)

## தூக்குத் தண்டனையை நிறுத்த கோருகிறார் சிம்ரஞ்சித்சிங்

(புதுடிலலி)

முன்னாள் இந்தியப்பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில குற்றவாழிகளாக காணப்பட்ட முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோருக்கு இம்மாதம் 17ந்திகதி தூக்குத் தண்டனையை நிறுத்துமாறு சிரோன்மணி அகாளிதளம் (அம்ரிதசார்) பிரிவின்தலைவர், சிம்ரஞ்சித் சிங்மான் தமிழகத்தலைமைச் செயலாளருக்குஅவசரகடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்

### அரசு-ஜே.வி.பி உடன்பாடு

## வர்த்தகர்களுக்கு பாதிப்பைத் தருமாம்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஜே.வி.பியினரும் புரிந்துணர்வு உடன்பாடு செய்துள்ளமை வர்த்தக சமூகத்தினரின் திட்டங்களுக்கு முரணாக உள்ளதாக வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் சந்திரா ஜெயரட்ண தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசும் விடுதலைப்புலிகளும் யுத்த நிறுத்தம் செய்து பேச்சு வார்த்தை நடத்துவதனையே வர்த்தக சமூகத்தினர் விரும்புகின்றனர்

[8ம் பக்கம் பார்க்க]

## புதிய அமைச்சரவை அடுத்தவாரம் வெளியாகும்

(கொழும்பு)

இருபது பேரைக் கொண்ட புதிய அமைச்சரவையின் நியமனங்கள் அடுத்தவாரமளவிலேயே இடம்பெறுமென ஜனாதிபதியுடன் நெருங்கிய சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் நேற்றிரவு தெரிவித்துள்ளார்.

புதிய அமைச்சரவையில் ஜனாதிபதியுடன் முரண்பாடு கொண்டுள்ள அமைச்சர்களான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், எஸ்.பி. திசாநாயக்கா மஹிந்த விஜயசேகரா ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே ஆகியோருக்கு இடம் கிடைக்காது என்றும் அந்த அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (வ)

## சமாதான முயற்சியை அரசு கைவிடவில்லை

### அமைச்சர் அனுருத்த

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கான சமா மின்சகதி அமைச்சரும் பிரதி பாதுகாப்பு அமைச்சருமான

தல், காபந்து அரசு அமைக்கப்பட்டு பொதுத்தேர்தல் நடத்துதல் போன்ற முக்கியமான நிபந்தனைகளுடன் காபந்து

காணப்பட்ட முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோருக்கு இம்மாதம் 17ந்திகதி நிறைவேற்றப்படவுள்ள

## அமைச்சர் தலைமையிலான குழு
# வர்த்தகர்களை மிரட்டி நிவாரணம் பெறுகிறது!

தென்பகுதியில் நிலவும் வரட்சியினைத் தொடர்ந்து அமைச்சர்ஒருவர் தலைமையிலான குழுவென்று தலைநகர் கொழுமபில் வாத்தகர்களை மிரட்டி நிவாரணப் பொருட்களைப பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது:

[தலைநகர் கொழும்பில் உள்ள வர்த்தகாகளிடம் வரட்சி நிவாரணத்திற்கென உணவுப்பொருட்கள் சேகரிக்கச் சென்ற குறிப்பிட்ட அமைச்சர் வர்த்தகர்களிடம் கடுமையாக நடந்துகொண்டதாகவும் தெரியவருகிறது.

இச்சம்பவம் குறித்துமலையக மக்கள்முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

சிங்மான தமிழகத்தலைமைச் செயலாளருக்குஅவசரகடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

தமிழகதலைமைச் செயலாளருக்கு அவர் அனுப்பிவைத்துள்ளகடிதத்தில் தெரிவித்திருப்பதாவது.

பாராளுமனற உறுப்பினர் என்றமுறையில் முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோருக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனையை தான் எதிர்க்கிறேன்,

செப்ரெம்பர் 17ந்திகதி தூக்குத் தண்டனை நிறைவேறும் போது சென்னை சிறைச்சாலையில் இருப்பதற்கு விரும்புவதால் 17ந்திகதிதான் சென்னைக்கு வருகிறேன் என்று

[8ம் பக்கம் பார்க்க]

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கான சமாதான தீர்வை அரசு ஒருபோதும் கைவிடமாட்டாது இத்தீர்வை எட்டும்வரை யுத்தம் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

இவ்வாறு எரிபொருள் மின்சகதி அமைச்சரும் பிரதி பாதுகாப்பு அமைச்சருமான ஜெனரல் அனுருத்ரதத்வத்த தெரிவித்துளளார்.

நேற்று அரசும் ஜே.வி.பியும் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தையடுத்து

[8ம் பக்கம் பார்க்க]

# இந்திய மீனவர் 13பேரும் திங்கள் விடுதலையாவர்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள 13இந்தியமீனவர்களும் எதிர் வரும் 10ம்திகதி திங்கட் கிழமை விடுவிக்கப்படவுள்ளனர்.

இவர்களது விடுதலை தொடர்பான உத்தரவை சட்டமா அதிபர் திணைக்களம் மேல் நீதிமன்ற அரச சட்டதரணி எஸ். கணேசராசா மூலம் யாழ் நீதிமன்ற நீதிவான் இ. த. விக்கினரா

[8ம பக்கம் பார்க்க]

# நம்பிக்கையில்லா பிரேரணையில் இருந்து ஐக்கிய தேசியக்கட்சி மெல்ல நழுவுகிறது!

(கொழும்பு)

அரசுக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை பாராளுமன்றம் இன்று கூடும் போது சமர்ப்பிக்கப்போவதில்லை எதிர்க்கட்சி தலைவர் ரணில்விக்கிரமசிங்கா அறிவித்துள்ளார்;

ஐக்கிய தேசியக்கட்சி நம்பிக்கை இல்லாத்தீர் மானத்தை சமர்ப்பிக்கும் பட்சத்தில் அதன்மீதான விவாதத்தை 7ம் திகதி வெள்ளிக்கிழமை நடத்த முடியுமென சபாநாயகர் அனுரா பண்டார நாயக்கா அறிவித்துள்ளார்.

இதேவேளையில் நம்பிக்கை இல்லாப் பிரேரணை இன்று பாராளுமன்றம் கூடும் போது சமர்ப்பிக்கப்பட மாட்டாது என்று ரணில்விக்கிரமசிங்கா அறிவித்திருப்பது சிறுபான்மைத் தமிழ்கட்சிகளுக்கு ஏமாற்றத்தை அளித்திருப்பதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(8ம் பக்கம் பார்க்க)

## ஜே வி.பி கண்டிக்கிறது

(கொழும்பு)

பொது ஜனஐக்கிய முன்னணி அரசின் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்தை உடன் ஆரம்பிக்குமாறு கோரி ஆர்ப்பாட்டம் செய்த ஐக்கிய தேசியக்கட்சி தற்போது பின்வாங்குவதை ஜே. வி. பியின்பிரசாரசெயலாளர் விமல் வீரவன்ச கண்டித்துள்ளார். (வ)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### தீராத வியாதிகளை குணப்படுத்துதல்

நீரிழிவு,மூலரோகம், குடற்புண், உண்ணாக்கு அளற்சி. மாதுறு நோய்கள் (WOMAN DISEASE) செங்கண் மாரி, சிறுநீர்பைக்கல், பாலரோகங்கள், ஆண்மைக் குறைவு, சரும ரோகங்கள், கிரந்தி, முட்டு. ஒவ்வாமை, சரும வெள்ளைப் புள்ளி போன்ற நோய்கள் பூரண குணமடைய, கூந்தல் வளர் தைலங்கள், கரிசலாங்கன்னித் தைலம் பெற்றிட நீங்கள் நாட வேண்டிய இடம். அகத்தியர் வைத்தியசாலை DR.K. V. ITHURAIRAJAH DAM, RAMP. Kulappiddy Junction Front of MarketKKSRd. Kokuvil [3513]


# இப்போது ஏற்படாத சமாதானம் எப்போதுமே ஏற்படாது

## வர்த்தக சமூகத்தினர் கருத்து

(கொழும்பு)

நாட்டில் இப்போது சமாதானம்ஏற்படாவிட்டால் எப்போதுமே ஏற்படப் போவதில்லையென சமாதானத்திற்கான முன் முயற்சிகளை மேற்கொண்டுவரும் வர்த்தக சமூகத்தினர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாக பிரபல வர்த்தகநிறுவனமானஜோன் கேல்ஸ்நிறுவனத்தின்துணைத் தலைவர் ஜெகத்பெர்னாண்டோ கருத்து தெரிவிக்கையில்,

அடிமட்டத்திலிருந்து நாட்டின் ஒவ்வொரு மூலை முடுக்கிற்கும் இந்த செய்தியை எடுத்து செல்லவுள்ளோம்.

இதன் பொருட்டு அடுத்து வரும் 3வாரங்களுக்கு நாட்டின் அனைத்து செய்தி ஊடகங்களிலும் தொடர்ச்சியாக சமாதானம் பற்றிய விளம்பரங்களை செய்யவுள்ளோம்.

போரின் கொடுமையால் நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் பற்றி மக்கள் விழிப்படைய வேண்டும்.

அரசியல் வாதிகளோ புலிகளோசமாதானத்தை அலட்சியம் செய்ய முடியாத அளவிற்குசமாதானக் குரல்ஓங்கி ஒலிக்க வேண்டும் இதனை செய்துமுடிப்பதே எமதுபணியாகுமென அவர்மேலும் தெரிவித்தார். (உ-5)

## இளைஞன் சுட்டுக் கொலை

(திருகோணமலை)

திருகோணமலை செல்வநாயகபுரம் பகுதியில் இனந்தெரியாதோரால் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுளளார்.

நேற்று முன்தினமிரவு 8.30 மணியளவில் மேற்படி நபரது ஆட்டோவை வாடகைக்கு அமர்த்திச் சென்ற இனந்தெரியாதநபர்கள் இவரைச்சுட்டுக் கொன்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ந- 5)

★ ★ ★ ★ ★

(வவுனியா)

வவுனியா குமாங்குள மயானத்தில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்

நேற்று முன் தினமிரவு நடைபெற்ற இச் சம்பவத்தில் பிரஸ்தாப இளைஞனின் நெஞ்சிலும் தலையிலும் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன. (ந- 4)

## தேசிய விளையாட்டு விழா யாழ் மாவட்ட வீரர்கள் இன்று குருநாகல் பயணம்

(யாழ்ப்பாணம்)

குருநாகலில் நடைபெறவுள்ள 27 வது தேசிய விளையாட்டு விழாவில் கலந்து கொள்வதற்கு யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 35 பேர் அடங்கிய மற்றொரு குழு இன்று கப்பல் மூலம் புறப்படவுள்ளது.

இன்று புறப்படவுள்ள விளையாட்டுக் குழுவில் அங்கம் வகிக்கும் வீரர்களை பயண ஏற்பாட்டுடன் இன்று காலை 8.30 மணிக்கு மணியம் கட்டடத்தில்சமுகபளிக்குமாறு யாழ். செயலக விளையாட்டுத்துறை அதிகாரி தெரிவித்துள்ளார். (உ-10)

## மேலதிக கொட்டகை அமைப்பு

(மல்லாகம்)

சுன்னாகம் தெற்கில் இயங்கும், மயிலிட்டி கலைமகள் மகாவித்தியாலயத்திற்கு மேலதிக கொட்டகைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே ஓலையினால் வேயப்பட்ட கூரைகள் தற்போது சீற்றுக்களால் வேயப்பட்டுள்ளன.

மேலும் இப்பாடசாலையின் பாவிப்பிலுள்ள ஒரு பழைய கிணறும புனரமைக்கப்பட்டுள்ளது. (உ-122)

## செங்கை ஆழியானின், மரணங்கள் மலிந்த பூமி சிறந்த நாவலாக தெரிவு

(யாழ்ப்பாணம்)

தமிழ் நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தினால், ஈழத்தின் பிரபல நாவலாசிரியர் செங்கை ஆழியான் எழுதிய ''மரணங்களமலிந்த பூமி'' மிகச் சிறந்த நாவலாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாடு கலை இலக்கியப் பெருமன்றம் 2001 ஆம் ஆண்டில் தமிழில் வெளியான நாவல்களில் மிகச் சிறந்ததாகத்தேர்ந்தெடுத்தஇரண்டு நாவல்களில் செங்கை ஆழியானின் மேற்படி நாவலும, தமிழ்நாட்டின் நாவலாசிரியர் ம. நடராசன் எழுதிய ''ஊர்கலைஞ்சு போச்சு'' என்ற நாவலும் அடங்குகின்றன;

இம்மாதம் 15 ஆம் திகதி தமிழ்நாட்டின் எட்டையபுரத்தில் நடைபெறவிருக்கின்ற பாரதி விழாவில் இந் நூல்களுக்கான பரிசிலும் விருதும் வழங்கப்படவுள்ளன.

இப்பரிசிலையும் விருதையும் செங்கை ஆழியான் நேரில் சென்று பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது; (உ)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

நுண்கலைமாணி, இசை/நடனம் இசைக்கலைமணி/ நாட்டியக்கலைமணி பரீட்சைகள்

மேற்படி கற்கை நெறிகளின் மூன்றாம், நான்காம் வருடப் பரீட்சைகளுக்கான கால அட்டவணையை இசைத்துறை, நடனத்துறை, கலைப் பீடாதிபதி அலுவலக விளம்பரப் பலகைகளில் பார்வையிடலாம்.

மூன்றாம் வருடப்பரீட்சைகள் 14-09-2001 ல் இருந்து ஆரம்பமாகும்:

பதிவாளர்

[C/2450]


## தலைவர் வருகையும் செயற்திட்டமும

(தென்மராட்சி,

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் வலயத் தலைவர் வருகையும் செயற் திட்டமும் எதிர் வருஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு கைதடி முத்துக் குமாரசாமி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுளளது.

கழகத் தலைவர் லயன். டாக்டர். பே. பிலிப்ஸ் தலைமையில் இவ் வைபவம் நடைபெறும. [செ-77]


யாழ். பிராந்திய மக்கள் வங்கி விளையாட்டுக் கழகம்

அறிவித்தல்

ஆண்களுக்கான மாபெரும் சைக்கிள் ஓட்டப் போட்டி

காலம்: 08 - 09 - 2001 சனிக்கிழமை
நேரம்: காலை 7-00 மணி (இ. நே)
இடம்: நல்லூர் சட்டநாதர் ஆலய முன்றல்

போட்டியாளர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்வதுடன் போட்டி ஆரம்பமாகும் நேரத்திற்கு முன்சமுகம் தந்து ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

செயலாளர்.

யாழ் பிராந்திய மக்கள் வங்கி விளையாட்டுக் கழகம்.

(சி 2454)



இலங்கை மின்சார சபை யாழ். பிரதேசம்

மின் தடை பற்றிய அறிவித்தல்

மின்மார்க்கங்களில் அவசர திருத்த வேலைகள் செய்ய வேண்டியுள்ளதால் 08-09-2001 சனிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் பி. ப. 5.00 மணி வரையும் யாழ்ப்பாண குடாநாடு பூராகவும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின்பாவனையாளருக்கு அறியத்தருகின்றேன். வேலைகள் பூர்த்தியடைந்தும் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாக மின் வழங்கப்படும் என்பதனையும பாவனையாளருக்கு இதிதால் அறியத்தருகின்றேன்.

இதனால் ஏற்படும் சிரமங்களுக்காகவும் மனம் வருந்துகின்றேன்.

பிரதேச மின் பொறியியலாளர்,
இலங்கை மின்சார சபை,
யாழ். பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.

''சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்''
இலங்கை மின்சார சபை.

[C/2451]



ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான விஷு வருடம் ஆவணித்திங்கள் 21 ஆம் நாள் இன்று (06-09-2001) வியாழக்கிழமை காலை 7.35 மணி முதல் 8.28 மணி வரையுள்ள கன்னி லக்கின சுபமுகூர்த்த சுபவேளையில்-

அமரர் திரு ராசாப்பத்தர் அவர்களின் பேரனும்
திரு. திருமதி சிவராஜா உமாதேவி தம்பதிகளின்
புத்திரனுமான திருநிறை செல்வன்
பாபு
அவர்களுக்கும்

அமரர் திரு. சந்தனப்பத்தர் அவர்களின் பேர்த்தியும்
திரு.திருமதி சவுந்தரராஜன் ராஜலட்சுமி தம்பதிகளின்
புதல்வியுமான திருநிறை செல்வி
கமலேஸ்வரி
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு, யாழ் வண்ணை ஸ்ரீவெங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம் ஸ்ரீ லஷ்மி நாராயணன் கல்யாண மண்டபத்தில் நடைபெறும் திருமணத்திற்கும் அதைச்சார்ந்த நாகவல்லி மற்றும் வைபவங்களுக்கும் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை வாழ்த்தி ஆசீர்வதிக்குமாறு அனபுடன் அழைக்கின்றோம்.

வரவேற்புபசாரம்;
மணமகன் இல்லத்தில் நாளை (07-09-2001) வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கும் மணமகள் இல்லத்தில் (08-09-2001) சனிக்கிழமை மாலை 4.00மணிக்கும் நடைபெறும். வரவேற்புபசாரத்தில் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் குடும்பசகிதம் வருகைதந்து சிறபபிக்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

★தங்கள் நல்வரவை அன்புடன் விரும்பும் ★

திரு.திருமதி சிவராஜா உமாதேவி தம்பதிகள்
63, பெரியதம்பிரான் வீதி,
வண். வடமேற்கு, யாழ்ப்பாணம்.

திரு.திருமதி சவுந்தரராஜன் ராஜலட்சுமி தம்பதிகள்
38, கில்னர் ஒழுங்கை,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(துர்க்கா நகைப்பூங்கா, கன்னாதிட்டி)

குறிப்பு- எமது அழைப்பிதழ் கிடைக்காத நண்பர்கள் இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாகத் தயவுடன் ஏற்று வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இரு வீட்டார் அழைப்பு) (c2453)

# ஆசிரியர்களுக்கான குறை நிவர்த்தி சேவை

# இம்மாத நடுப்பகுதியில் ஆரம்பம்

## இல.தமிழர் ஆசிரியர் சங்க செயலர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கக் கல்வி வலயங்களுடன் இணைந்து நடத்த விருக்கும் ஆசிரியர்களுக்கான குறை நிவர்த்தி சேவை இம் மாத நடுப்பகுதியில் ஆரம்பமாக உள்ளது.

மேற்கண்டவாறு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த. பஞ்சலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்; இச் சேவையின் போது கல்வி வலயங்களைச் சார்ந்த கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் கோட்டக்கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கணக்காளர்கள், நிர்வாக அதிகாரிகள் ஆகியோருடன் சங்கத்தின் தாய்ச்சங்க பிரதிநிதிகளும், மாவட்டப் பிரதிநிதிகளும் கலந்து கொள்வர்.

இக் குறை நிவர்த்தி சேவையின்போது பிரச்சினைகளை முன்னரே இனம் காண்பதற்காக சங்கத்தினால் வழங்கப் பட விருக்கும் விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று இரட்டைப் பிரதிகளில் தயாரித்து மூலப் பிரதியை வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு கடித மூலமாகவோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்து விட்டு அதன் மற்றப்பிரதியை தாங்கள் கடமைபுரியும் பாடசாலைகளுக்குரிய சங்கத்தின் கிளைச் செயலாளர்களிடம் ஒப்படைக்கவும்.

விண்ணப்பப் படிவங்களை சனிக்கிழமை தொடக்கம் நல்லூரில் அமைந்துள்ள சங்கத்தின் தலைமைப் பணிமனையிலும், எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் வ. கணேசமூர்த்தி (அதிபர் யாழ் நெல்லியடி அ.மி.த.க. பாடசாலை) க. சிவனேசன் (ஆசிரியர், யாழ். மானிப்பாய் மெமோரியல் ஆங்கில பாடசாலை) பொ. அருணகிரிநாதன். அதிபர் யாழ். வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை, எம். விஸ்வலிங்கம் அதிபர் அத்தியார் இந்துக்கல்லூரி நீர்வேலி ஆகியோரிடமும் பெற்றுக் கொள்ளலாம்.

கல்வி வலய ரீதியாக குறை நிவர்த்தி சேவை நடைபெறும் திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும். யாழ்.கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் இம்மாதம் 11ம் திகதிக்கு முன்னரும் மற்றைய கல்வி வலயங்களைச் சார்ந்த ஆசிரியர்கள் இம்மாதம் 15 ஆம் திகதிக்குமுன்னரும் விண்ணப்பப்படிவங்களை உரிய இடங்களில் சமர்ப்பித்தல் வேண்டும்;

நெடுந்தீவு ஊர்காவற்றுறை பளையாகிய கோட்டங்களைச் சார்ந்தவர்கள் அருகில் உள்ள கிளைச்செயலாளர்களிடம் ஒப்படைக்கவும்.

இந்தகுறைநிவர்த்திசேவையின் போது கல்விவலய மட்டத்தில் தீர்க்கக்கூடிய வற்றுக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றால், வட, கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு மட்டத்திலும் மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் மட்டத்திலும், கல்வி அமைச்சு, ஒய்வூதியத் திணைக்களம், பரீட்சைத் திணைக்களம், தேசியக்கல்வி நிறுவனம் ஆகிய வற்றில் தீர்க்கப்படவேண்டிய பிரச்சினைகளுக்கு சங்கத் தினால் உரிய நடவடிக்கை எடுக்கப் படும் எனவும் அவர் தெரிவித்தார்; (க)

## சனியன்று பகல் மின் தடை

[யாழ்ப்பாணம்]

மின் மார்க்கங்களில் அவசரத் திருத்த வேலைகள் செய்ய வேண்டியுள்ளதால் 8 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் பி. ப 5.00 மணி வரையும் யாழ். குடா நாடு பூராகவும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என இலங்கை மின்சார சபை யாழ். பிரதேச அலுவலகபிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்,

வேலைகள் பூர்த்தியடைந்ததும் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாகவே மின் வழங்கப்படும் எனவும் பாவனையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

[உ]

## சட்ட விரோத மாடுவெட்டல்

[கோப்பாய்]

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்குப்பட்ட பகுதிகளில் சட்ட விரோதமாக மாடு வெட்டுவது அதிகரித்து வருவதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, இப்பகுதியில் அனுமதி பெற்ற இறைச்சிக் கடைகள் பல இயங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது.

(உ-79)

## பனைவளத்துறையை பல்கலையில் பாட நெறியாக்கக்கோரிக்கை

(தென்மராட்சி)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வவுனியா வளாகத்தில் பனை வளத்துறை சார்ந்த பல்கலைக்கழக மட்டப் பயிற்சி ஒன்றினை ஆரம்பிக்கும்படி வடமாகாண தெங்கு பனம் பொருள் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின்சமாசம் வளாக முதல்வர் பேராசிரியர் க.மோகனதாஸிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அக்கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

வடக்கு -கிழக்கு மாகாணத்தின் தன்னுரிமைவளமாகக் காணப்படும்பனை வளத்தின் பயன் பாடுகளைக் கற்றுப் பயன்பெறப் பலரும் ஆர்வமுடன் இருக்கும் நிலையில் பல்கலைக்கழக மட்டத்தில் பயிற்சி அளிக்கமுனையாதது மிகப் பெரும் குறையாகும்.

எமதுபனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், சபைகள், கம்பனிகள் மற்றும் தனியார் நிலையங்களில் வழங்கப்படும் பயிற்சி முக்கியத்துவம் பெறுகின்றது.

தேவையான மூலவளம் மனித வளம் ஆகியன இருந்தும் தொழில் நுட்பப் பயிற்சியின்மை காரணமாக நாட்டின் தேசிய வருவாய்க்குப் பங்களிப்பு நல்க முடியாத நிலையில் உள்ளது.

எமது அண்டைநாடான இந்தியாவில் பல அறிஞர்கள் பனை வளத்துறையில் கலாநிதிப் பட்டம் பெற்றுள்ளனர்.

எனவே பனை வளத்துறையில் டிப்ளோமா கல்வி நெறியினையும் ஆறு மாத காலத்தினைக்கொண்ட சான்றிதழ் பயிற்சிநெறியையும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கும்படி அக்கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ-77)

## கிளி. மாவட்டத்தில் ஆயிரத்து 612 பேர் அவயவம் இழப்பு

(வவுனியா)

கிளிநொச்சி மாவட்டத்தில், தொடரும் போர் அனர்த்தங்களினால் இது வரை ஆயிரத்து 612 பேர் ஊனமுற்றுள்ளனர்.

ஊனமுற்றவர்களில் ஆயிரத்து 11 பேர் ஆண்கள் எனவும் ஏனையவர்கள் பெண்கள் எனவும் புள்ளி விபர அறிக்கைகள் தெரிவித்துள்ளன.

அங்கு புதைத்து வைக்கப் பட்டிருந்த மிதிவெடிகள், நிலக்கண்ணிகள் மற்றும் இனம் புரியாத மர்மப் பொருட்கள் வெடித்தமையாலும் யுத்தம் இடம் பெற்று கொண்டிருக்கும் போது இடையில் சிக்கியமையாலும் இவர்கள் ஊனமுற்றுள்ளனர்;

[உ-4]

## வெளி நாட்டிற்குப் பயணம் மேற்கொள்ள வேண்டாம்

### எம்.பிக்களுக்குவேண்டுகோள்

[கொழும்பு]

பொது ஜன ஐக்கிய முன்னணிப் பாராளுமன்ற உறுப்பினர்களை வெளி நாடுகளுக்குப் பயணம் மேற் கொள்ள வேண்டாமென கட்சித் தலைப்பீடம் கேட்டுள்ளது.

இம் மாதம் 8 ஆம் திகதி வரை இத்தகைய வெளி நாட்டுப் பயணங்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் இவர்களது இத்தகைய பயணங்களுக்கு எந்த விதமான அனுமதியும் வழங்க வேண்டாமெனவும் பாராளுமன்றத்திற்கு அறிவுறுத்தல் வழங்கப் பட்டுள்ளது.

பாராளுமன்றக் கூட்டத் தொடர் நாளை வியாழக் கிழமை மீண்டும் ஆரம்பமாகவுள்ளதால் இத்தகைய வெளி நாட்டுப் பயணங்களை மேற் கொள்ள வேண்டாம் என பாராளு மன்ற உறுப்பினர்களுக்கு பொது ஜன ஐக்கிய முன்னணிகளின் தலைமைப் பீடம் கடிதம் அனுப்பி வைத்துள்ளது;

[வ]

## காணாமற் போனோர் பற்றிய விசாரணைகளுக்காக உறவினர்க்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

1996, 1997 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளை மேற் கொண்டுவரும் விசேட புலனாய்வுப் பிரிவினர் பின்வரும் காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளுக்காக யாழ். பொலிஸ் நிலையத்திற்கு உடன் சமுகளிக்குமாறு சம்பந்தப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் சாட்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

இராசையா சுதர்மன் (கோ.இல- ஐ.ஆர். 245) 110உப்புக்குளயவீதிகொழும்புத்துறை சாட்சி- சந்திரன் சித்திரா 167 விபுலானந்தர் வீதி, அரியாலை.

★ சரவமதி இரமதி (கோ.இல. பி-220 வரணி) சாட்சிகள-இரசமதிமதிவதனி வேலுப்பிள்ளை பூரணம்,

★ கதிரேசலிங்கம் கோணேஸ்வரன் (கோ.இல. பி-250 7/9விபுலானந்தாவீதி கொழும்புத்துறை.

★ நவரட்ணம் யோகநேசன் (கோ.இல: ஐ. ஆர். 216) 50/18 செட்டி வீதி நல்லூர்.

★ லலிதா சண்முகநாதன் (கோ.இல. பி-406, ஆல 25 அரியாலை.

★ எஸ். அரிபவானந்தன் (கோ.இல. ஐ.ஆர் 157) அண்ணாசிலையடி கரணவாய் கரவெட்டி சாட்சி நாகம் அரியகுட்டி

★ விஸ்வலிங்கமபத்மநாதன் (கோ. இல.ஐ.ஆர். 155) கோயிலாக்கண்டி கைதடி.

★ சொலமன் அருள்நேசன் (கோ.இல.ஐ.ஆர்பி.109/44) தேவாசிகுளம மிருசுவில்.

★ சண்முகம் வசந்தன் (கோ.இல. ஐ.ஆர் 175)ஆவரங்கால் கிழக்கு புத்தூர்.

★ எஸ். கணேசமூர்த்தி (கோ.இல.ஐ.ஆர் 149 707) வல்லிபுரம்.

சாட்சிகள்- சிவரூபன் சுரேஷ் குமார், மாரிமுத்து தங்கவேலு

★ எஸ். அற்புதநேசன் (கோ. இல: ஐ: ஆர். 150) சாட்சிகள்- அற்புதன் ஈஸ்வரி ஜெயராஜ்.

★ இராமநாதன் அன்னலிங்கம் (கோ.இல.ஐ ஆர் 173) மறவன்புலோ, சாவகச்சேரி சாட்சிகள்- அன்னலிங்கம் ஜெயலதா:

★ சுப்பிரமணியம் ஜெயநாதன் (கோ.இல.ஐ.ஆர் 64/99) செல்வபுரம் அச்சுவேலி.)

சாட்சிகள் சுப்பிரமணியம் தங்கப்பிள்ளை இவரதுசகோதரி.

★ கந்தையா திவாகரன் (கோ.இல.ஐ.ஆர்பி09/132) தொல்புரம் மதது சுழிபுரம்:

★ றொபேட் கெனடிராஜா (கோ.இல. பி09/145) 39 சாந்த செபஸ்ரியன் வீதி குருநகர்.

சாட்சிகள்- இசாயாஸ் இமல்டா இசாயாஸ் ஜெயமேரி.

★ பரமு சந்திர சேகரன் (கோ.இல: பி358) கடற்கரை வீதி 4 ஆம் ஒழுங்கை கொட்டடி.

★ இராசையா பாலசுப்பிரமணியம் கோ.இல. ஐ:ஆர் 244) மவுண் கார்மல் வீதி, யாழ்ப்பாணம்.

★ கந்தசாமி செந்தீபன் (கோ. இல பி 09/114) மிருசுவில் கிழக்கு.

சாட்சிகள்- ஸ்லதா. கந்தசாமி சதீபன் மிருசுவில்,

காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ள காரணத்தினால் சம்பந்தப்பட்ட அனைவரையும் தத்தம்பகுதி கிராம அலுவலருடன் தவறாது வருகை தந்து தமது பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ் வந்துள்ள விசேட புலனாய்வுக் குழுவின் பொறுப்பதிகாரி சுனில் ககுலாந்தா அறிவித்துள்ளார். [உ-10]

## நினைவுப் பேருரைகள்

[தென்மராட்சி]

யாழ்ப்பாணப் பலகலைக் கழகத்தில் அக்டோபர்மாதம் நடைபெறவுள்ள பட்டமளிப்பு விழாவைத் தொடர்ந்து நினைவுப் பேருரைகள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன,

இதன் அடிப்படையில் அக்டோபர் 8ஆம் திகதி சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரையை பேராசிரியர் சபா. ஜெயராஜாவும் அக்டோபர் 9ஆம திகதி சேர். பொன். இராமநாதன் நினைவுப் பேருரையை தமிழ்நாட்டைச் சேர்ந்த உயர் நீதி மன்ற வழக்கறிஞர் அடிப் பொடி ரீ. என். இராமச்சந்திரனும், அக்டோபர் 10ஆம் திகதி பேராசிரியர் சு. வித்தியானந்தன் நினைவுப் பேருரையை பேராசிரியர் செ. பாலச்சந்திரனும் நிகழ்த்தவுள்ளனர்;

(செ-77)

## யாழ். பல்கலை பட்டமளிப்பு விழாவில் ஐவருக்கு கௌரவ பட்டம்

(தென்மராட்சி)

அக்டோபர்மாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளயாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 20 ஆவது பட்டமளிப்பு விழாவில் ஐந்துபேருக்கு கௌரவப் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்தியா தமிழ்நாட்டைச் சேர்ந்த சேக்கிழார் உயர் நீதிமன்ற வழக்கறிஞரான அடிப்பொடி ரீ. என். இராமச்சந்திரன் என்பவருக்கு கௌரவ இலக்கியக் கலாநிதிப்பட்டமும்,

பேராசிரியர் க: குணரத்தினத்துக்கு கௌரவ விஞ்ஞான கலாநிதிப்பட்டமும், பண்டிதர் க: சச்சிதானந்தனுக்கு கௌரவ கலாநிதிப் பட்டமும் அருட்கவி. சீ.விநாசித்தம்பிக்கு கௌரவ முதுகலைமாணிப்பட்டமும், மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவுக்கு முதுகலை மாணிப் பட்டமும் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(செ-77)

## கணனிப் பிரயோக உதவியாளர் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத் தொழிற் பயிற்சி அதிகார சபையினால் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ள ஒரு வருட முழுநேர கணனிப் பிரயோக உதவியாளர் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன:

16 - 25 க்கு இடைப்பட்ட வயதையுடையஜீ.சீ.ஈசாதாரண தரப்பரீட்சையில்கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்தவர்கள் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதிக்கு முன் இந்தப் பயிற்சிநெறிக்குவிண்ணப்பிக்கலாம்.

மேலதிக விபரங்களை மாகாண முகாமையாளர், தேசிய பயிலுநர் கைத் தொழிற் பயிற்சி அதிகார சபை, இல: 7 கோவில் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும்,

(உ)

# கோட்டை ரயில் நிலையம் முன்பாக
# மாபெரும் உண்ணாவிரதப் போர்
## சலன சித்திர அமைப்பு ஏற்பாடு

(கொழும்பு)

யுத்தத்துக்குஎதிராகமக்கள் பேரியக்கமொன்றை வலியுறுத்தி நேற்று கொழும்பு கோட்டை புகையிரத நிலைய முன்றலில் ''சலன சித்திரம்'' என்னும் அமைப்பு உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தியுள்ளது.

நேற்று மு.ப 10.00 மணிக்கு ஆரம்பமான மேற்படி உண்ணாவிரதப் போராட்டத்தில் கட்சித் தலைவர்கள் மற்றும் பொது அமைப்புக்களின்தலைவர்கள், கலந்து கொண்டதுடன் கலந்துரையாடலொன்றும் இடம்பெற்றது.

உண்ணாவிரதப் போராட்டம் தொடர்பாக சலன சித்திர அமைப்பின் செயலாளர் கே. தேவதாசன் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில்; இலங்கையில் தொடரும் இக்கொடிய யுத்தம் இனியும் தொடருமானால் இனங்களிடையே நல்லுறவு மற்றும் புரிந்துணர்வு என்பன ஏற்படுவதற்கு பதிலாக விரோதமும் விரிசலுமே ஏற்படும்.

மக்களின் பெயரால் மக்களுக்கு எதிரான யுத்தம் முன்னெடுக்கப்படுவதை தடுக்க மக்கள் முன்வர வேண்டும். அரசியற் கட்சிகள் தொழிற் சங்கங்கள், வெகுஜன அமைப்புகள், மற்றும் தொண்டர் அமைப்புக்கள் அனைத்தும் இணைந்து யுத்தத்துக்கு எதிரான பேரியக்கமாகத் திரண்டெழ வேண்டும் இதன் மூலம் யுத்தத்துக்கு எதிரான மக்கள் போராட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# வாள்வெட்டுச் சம்பவத்தில் இருவர் படுகாயம்

(மந்திகை)

உறவினர்களிடையே ஏற்பட்ட வாய்த்தகராறு கைகலப்புவரை சென்றதில வாள்வெட்டுக்கு இலக்கான இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த திங்கள் இரவு துன்னாலை தெற்கில இடம்பெற்ற இச்சம்பவத்தில் கடும் வாள்வெட்டுக்கு இலக்காகி, அதேஇடத்தைச் சேர்ந்த வேலன் செல்வன் (வயது 46) என்பவர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையிலும், எஸ். ஆனந்தராசா (வயது 40) என்பவர் அங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (உ-23)

# அதிபர்களுக்கான நேர்முகத் தேர்வு இன்று

(மந்திகை)

தென்மராட்சிப்பாடசாலைகளில் அதிபர்களாகக் கடமையாற்ற விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகத்தேர்வு இன்று காலை 9 மணிக்குநெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இயங்கும் வலய அலுவலகத்தில் நடைபெறுமென வலயக் கல்விப்பணிப்பாளர் வ. செல்வராசா தெரிவித்தார்.

தென்மராட்சி வலயத்தில் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைஉட்பட 9 பாடசாலைகளில் அதிபர் வெற்றிடம் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-23)

## தகுதிகாண் அரசு சித்தாந்தம்
# உலகில் எந்த நாட்டிலும் நடைமுறையில் இல்லை
## ரவூப்ஹக்கீம்

(மட்டக்களப்பு)

பொதுஜனஐக்கியமுன்னணி அரசுக்குபஜே.வி.பிக்குமிடையிலான தகுதிகாண்அரசுஎன்ற புதிய அரசியல் சித்தாந்தம் உலகில் வேறு எந்தவொரு நாட்டிலும் நடைமுறையில் இல்லாத ஒன்றுஎன ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கூறுகின்றது.

ஒருஅடிமைத்தளையுடனான ஆட்சியொன்றை அரசு ஜே.வி.பி.க்கு அடிபணிந்து உருவாக்கியிருப்பதாகவே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கருதுவதாக அக்கட்சியின் தலைவர் ரவூப்ஹக்கீம் தெரிதுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

தகுதிகாண்அரசின் பதவிக் காலத்தில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான எந்தவொரு முயற்சியும் மேற்கொள்ளக் கூடாது என ஜே.வி.பி கூறும் நிலையில் தகுதிகாண் அரசு மூலம் நாட்டில் சமூக,பொருளாதார ரீதியிலான முன்னேற்றங்கள் எதுவும் ஏற்படமாட்டாது என்றும் தெரிவித்துள்ளார்.

அடுத்த ஓரிரு மாதங்களில் எதிர்க்கட்சியினால் இந்த அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படும். அதன் மூலம்இந்த அரசு பதவிஇறக்கபபடும், என்ற நம்பிக்கையுடன் ஸ்ரீலங்கா முஸ்லிம காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீம் தகுதிகாண் அரசு தொடர்பாகக் கேட்ட போது கருத்துத்தெரிவித்துள்ளார். (வ)

# புதிய அமைச்சரவையின் பதவியேற்பு விரைவில்

(கொழும்பு)

தகுதிகாண்அரசின் புதிய அமைச்சரவை நாளை வெள்ளிக்கிழமைபதவிப்பிரமாணம் செய்யுமென்று அமைச்சரவை செய்திகள் தெரிவிக்கின்றன.

இரட்ணஸ்ரீ விக்கிரமநாயக்காவை பிரதமராக கொண்டு அமைக்கப் படும் புதியஅமைச்சரவையில் ஜனாதிபதியுடன் முரண்பாடு கொண்டுள்ள அமைச்சர்களான எஸ். பி. திஸநாயக்க, ஜீ. எல். பீரிஸ் மற்றும் ஜெயராஜ்பெர்னாண்டோபுள்ளே ஆகியோரும் அங்கம் பெறுவாரெனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அத்துடன் அரசை ஆதரிக்கும் கட்சிகளின் பிரதிநிதிகளான தினேஷ் குணவர்த்தனா, இந்திககுணவர்த்தனா, பேரியல்அஷ்ரப், பட்டி வீரக்கோன், ஆறுமுகம் தொண்டமான், டகளஸ் தேவானந்தா ஆகியோருக்கும் புதிய அமைச்சரவயில் இடமளிக்கப்படுமென தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை அமைச்சர் எஸ். பி. திஸநாயக்கா இன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுடன் முக்கியமான பேச்சுக்களில் ஈடுபடுவாரென்று தெரியவருகிறது.

அமைச்சர் திஸநாயக்கா ஜனாதிபதியை சந்திப்பதற்குரிய திரைமறைவு முயற்சிகளை ஜனாதிபதியின் நம்பிக்கைக்குரிய ஒருவர் மேற்கொண்டதாகவும் தெரியவருகிறது. (இ)

# மூளை மலேரியா தாக்கம் வடமராட்சி கிழக்கில் அதிகம்

(மந்திகை)

வடமராட்சி கிழக்கில் மூளை மலேரியாவின் தாக்கம் அதிகரித்துள்ளதாக வைத்தியசாலைப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இடப்பெயர்வின் பின் அப்பகுதியில் இயங்கும் 5 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் இந் நோயின் தாக்கத்திற்கு. மே மாதம் 10 பேரும் ஜூன் மாதம் 5 பேரும் ஜூலை மாதம் 24 பேரும், ஓகஸ்ட் மாதத்தில் 32 பேரும், ஆளாகியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தவிர, மேற்படி காலப் பகுதியில் சாதாரண மலேரியாவால் வடமராட்சி கிழக்கில் 100 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மலேரியா நோய்த் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் வடமராட்சி கிழக்கில் தற்போது மலேரியா ஒழிப்பு வாரம் பிரகடனப் படுத்தப்பட்டிருப்பது தெரிந்ததே. (உ-23)

## இராசி பலன்

06-09-2001
(ஆவணி 21, வியாழக்கிழமை)
திருதியை மு.ப 8.09 வரை
ரேவதி பி.ப 5.11 வரை
ராகுகாலம் 1.34-3.04
நல்லநேரம் 7.34 9.04
சித்தாமிர்தம்

**மேடம்**
பிதாசிந்தை, வீண்செலவு, சயனசுகக்குறைவு, முயற்சி தாமதம்.

**இடபம்**
மனக்குழப்பம், காரிய நன்மை, கௌரவம், பொருள் சேர்க்கை.

**மிதுனம்**
அதிகாரம், பணியாளர் உதவி, நல்லமுயற்சி, தூரதேசச்செய்தி.

**கடகம்**
கட்டுப்பாடு, ஆன்றோர் ஆசி, உடல்உழைப்பு, முயற்சி தாமதம்.

**சிங்கம்**
மனக்கிலேசம், பிரயாண பயம், போசனசுகம், காரிய தாமதம்.

**கன்னி**
சுவாரஸ்யம், வாகனவசதி, தனவரவு, மதிக்கப்படுதல்,

**துலாம்**
காரியஅனுகூலம், தேகசுகம், தொழில்விருத்தி, சந்தோசமான நிகழ்வு.

**விருச்சிகம்**
முயற்சி இடைஞ்சல், குடும்பக்கவலை, தர்மம், எதிர்பாராதநன்மை.

**தனுசு**
கல்விச்சிறப்பு, ரோகபயம், தடுமாற்றம், காரியதாமதம்.

**மகரம்**
தனவரவு, பிரயாணம், கூட்டுமுயற்சி, வாக்குப்பலிதம்.

**கும்பம்**
வீண்விவாதம், காரியதாமதம், மரியாதைக்குறைவு, பெண்களால் உதவி.

**மீனம்**
உடல்நலம், நண்பர்கள் உதவி, அதிகபிரயாசை, சயனசுகம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது).

-வளவன்-

## குருநாகல் மாவட்டத்தில்
# வறட்சியின் கொடுமை
## வனவிலங்குகள் உட்பிரவேசம்

(குருநாகல்

தற்போது நிலவும் கடும் வறட்சியால் குருநாகல் மாவட்டமும் பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளது.

வறட்சியின் காரணமாக வன விலங்குகள் குடியிருப்புப் பிரதேசங்களுக்குச் செல்லத் தொடங்கியுள்ளதுடன், உட்சென்ற யானைகள் பொதுமக்கள் பலரைக் கொன்றிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இதனையடுத்து வறட்சியில் இருந்து மக்களைப் பாதுகாப்பதா, வனவிலங்குகளிடமிருந்து அவர்களைப் காப்பதா என்று செய்வதொன்றறியாது அதிகாரிகள் திணறுவதாகவும் தெரியவந்துள்ளது. (உ)

## தென்மராட்சி கல்வி வலயத்தில்
# பின்னடைவான மாணவர்க்கு விசேட பாடபோதனை

(மந்திகை)

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலைகளில் க.பொ.த: சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பின்னடைவான மாணவர்களுக்கு விசேட வகுப்புக்கள் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா தெரிவித்துள்ளார்.

இந்த வகையில் வார இறுதி நாட்களில் காலை 9.00மணி முதல் கணித பாடத்தில் பின்னடைவான மாணவர்களுக்கு வகுப்புக்கள் நடத்தப்படவுள்ளன.

நெல்லியடி மத்தியமகா வித்தியாலயம், கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம், மட்டுவில் மகாவித்தியாலயம், பளைமத்திய கல்லூரி, முத்துக்குமாரசாமி வித்தியாலயம், இணுவிலில் இயங்கும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி, உரும்பிராயில் இயங்கும் நாவற்குழி மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலேயே மேற்படி வகுப்புகள் இடம்பெறவுள்ளன. (உ-23)

## விண்ணப்பிக்கும்
# திகதி நீடிப்பு

[வடமராட்சிகிழக்கு]

யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கத்தினால் நடத்தப்படவுள்ள பத்திரிகையாளர் பயிற்சி நெறிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி இம்மாதம் 10 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர் அறிவித்துள்ளார். (உ-43)

## 1கோடி 24இலட்சத்திற்கு மேல்
# வாக்காளர் அட்டைகளை அழிக்கத் திட்டம்

(கொழும்பு)

சர்வஜன வாக்கெடுப்பு ரத்துச்செய்யப்பட்டதைஅடுத்து சர்வஜன வாக்கெடுப்பிற்கென அச்சிடப் பட்ட ஒருகோடியே 24 இலட்சத்து 28 ஆயிரத்து 662 வாக்காளர் அட்டைகள் அழிக்கப்படவுள்ளதாக தேர்தல் திணைக்கள சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தபால் மூலம்வாக்களிப்பிற்கென அனுப்பட்ட வாக்குச்சீட்டுகள் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களிடம் இருப்பதாகவும அவை மீளப் பெறப்படுமெனவும்அந்த அதிகாரி தெரிவித்தார்,

இதேவேளை சர்வஜனவாக்கெடுப்பிற்கென இதுவரை செலவிடப்பட்ட தொகை அடுத்த இருவாரங்களில் தெரியவருமெனவும் அவர் தெரிவித்தார். [உ-5]

# வாசகர் பயன்பாட்டிற்கு தொலைக்காட்சி

[மல்லாகம்]

சுன்னாகம் நூல் நிலையத்திற்கு வலி தெற்கு பிரதேச சபையால் வழங்கப்பட்ட ரி.வி. டெக் மூலம் பல வாசகர்கள் பயனடைந்து வருகின்றனர்.

கல்வி சம்பந்தமான நிகழ்ச்சிகளை அதிகமான மாணவர்கள் கண்டு பயன்பெறுகின்றனர்.

மருதனார்மடம் நூல் நிலையத்திற்கு வழங்கப்பட்ட ரி.வி டெக் என்பன இடவசதியின்மையால் பாவிக்க முடியாத நிலையில் உள்ளதாகக் கூறப்படுகிறது. [உ-122]

# 600 ஏக்கர் காடு விஷமிகளால் தீக்கிரை

(கண்டி)

விக்டோரியா ரன்தெனிகல ரன்தெம்ப போன்றநீர்த்தேக்கங்களைப் பாதுகாக்கும் பொருட்டு அமைக்கப்பட்டிருந்த 600 ஏக்கர் காடுகள் விஷமிகளால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

காட்டிலுள்ள மிருகங்களை வேட்டையாடும்நோக்கிலேயே இக்காடுகள்தீக்கிரையாக்கப் பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இதனால் காட்டு மிருகங்கள் பல பலியாகியுள்ளதாகவும், பெருமளவு மிருகங்கள் தப்பியோடி விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-04

## இன்று ஒரு தகவல்

# விளையாட்டின் விபரங்கள்

ஓடி விளையாடு பாப்பா என்று பாடியது எதற்காக? சின்ன வயதிலிருந்தே உடம்பையும் நன்றாக வைத்திருக்க வேண்டும் என்பதற்காகத்தான், ஓடி விளையாடு தாத்தா- நீ ஓய்ந்திருக்கலாகாது தாத்தா என்று பாடவில்லை. ஏனென்றால் அந்த வயதில் ஓய்வு தான் முக்கியம். ஓடுகிறது முக்கியமில்லை. ஓடிவிளையாட ஆரம்பித்த மனிதன், இன்றைக்கு ஒலிம்பிக் நடத்துகின்ற அளவுக்கு வந்து விட்டான். இன்றைக்கென்று இல்லை. கி. மு.1370 லேயே ஒலிம்பிக் பந்தயம் ஆரம்பமாகி விட்டது. முதன் முதலில் கிரேக்க நாட்டில் ஆரம்பமானது.

ஒலிம்பியா என்கிற சமவெளியில் போட்டிப்-பந்தயம் எல்லாம் முதலில் நடந்தது. அதனால் ஒலிம்பிக் பந்தயம் என்று பெயர் வந்தது. முதல் ஒலிம்பிக் பந்தயம் ஒரே ஒரு நாள் தான் நடந்தது. அது மட்டுமல்ல, ஒரேயொரு போட்டி பந்தயமாக நடந்தது. அது என்ன தெரியுமா? 186 கஜம் ஓட்டப்பந்தயம் இப்போதெல்லாம் எத்தனை விதமான விளையாட்டுக்கள்! எத்தனை விதமான பந்தயங்கள், உடம்புக்குப் பயிற்சி கொடுக்கவேண்டும். அது உற்சாகமாகவும்இருக்கவேண்டும். அதற்காக மனிதன் எத்தனையோ விதமான விளையாட்டு முறைகளை உருவாக்கியிருக்கிறான்.

கலை நுணுக்கங்களையெல்லாம் அதிற் கலந்திருக்கிறான், இறகுப் பந்து (சட்டில் கொக்) இருக்கிறதல்லவா? இந்தியாவில் ஞானேந்திர போஸ் என்கிறவர் தான் இதை முதலில் தயார் செய்தார். முதலில் கொக்கு இறகைப் பயன்படுத்திப்பார்த்தார். சரியாக வரவில்லை. பிறகு வாத்து இறகை உபயோகப் படுத்தினார். பொருத்தமாக இருந்தது. வீட்டிற்குள் விளையாடுவதற்கான பந்தில் 72 மணிகள் இருக்கும். வெளியில் விளையாடுவதற்கான பந்தில் 84 மணிகள் இருக்கும். பொதுவாக 16 இறகுகள் இருக்கும். இறகுப் பந்து விளையாட்டு இறகு மாதிரி மென்மையாக உள்ள ஒன்று. ஆனால் மல்யுத்தப் போட்டி இருக்கிறதே, அது இதற்கு நேர்விரோதம்! முகத்திலெல்லாம் நேரடியாககுத்து வாங்க வேண்டியிருக்கும். இன்றைக்கு மல்யுத்த வீரர்கள் தேடிப்பிடித்து சாப்பிடுகிற பழம் எது தெரியுமா? அன்னாசிப் பழம்தான். உலக மல்யுத்த வீரர்கள் சங்கமே இதனைச் சிபார்சுசெய்கிறது.

காரணம் என்னவென்றால், மல்யுத்தம் செய்கிறபோது, முகத்தில் கண்ணுக்குப் பக்கத்தில் நிறைய குத்து விழும். உடம்பில் பல இடங்களில் காயம் உண்டாகும். அப்போது இரத்தம் கட்டியாகும். கன்றிப்போகும். அன்னாசிப் பழத்துக்கு இரத்தக்கட்டை உடைக்கக் கூடிய அபாரசக்தி இருக்கிறது.

அதனால், குடும்பத்தவர்களெல்லாம் கிடைக்கிறபோது கொஞ்சம் கொஞ்சம் அன்னாசிப்பழம்சாப்பிட்டுக்கொண்டு வந்தால் அது ஒரு பாதுகாப்பாக இருக்குமென்று நினைக்கிறேன். நான் ஏதோ அடிக்கடி குடும்பஸ்தர்களை கிண்டல் செய்து கொண்டிருக்கிறேன் என்று நீங்கள் நினைக்கக் கூடாது. மனைவி சொல்வதுதான் மந்திரம் என்று நினைக்கிற கணவன்மாரும் இருக்கிறார்கள். கணவன் சொல்கிறதுதான் மந்திரம் என்று நினைக்கிற மனைவிமாரும் இருக்கிறார்கள்,

இந்த மந்திரத்துக்குக் கட்டுப்படாமல் சண்டைபோட்டுக் கொண்டிருக்கிற தம்பதிகளும் இருக்கிறார்கள், இப்படிச் சண்டைபோடுகிறவர்கள் கைவசம் கொஞ்சம் அன்னாசிப்பழம் வைத்திருக்கிறது நல்லது என்கிறதுதான் என்னுடைய ஆலோசனை. சண்டைபோடாமல் சாமர்த்தியமாக குடும்பம் நடத்திக் கொண்டு வருகிறவர்களும் இருக்கிறார்கள். குடும்பஸ்தர்கள் எல்லாம் சேர்ந்து ஒரு கூட்டம் போட்டார்களாம். அந்தக் கூட்டத்துத் தலைவர் இந்தக்கூட்டத்தில் சம்சாரத்துக்கும் பயந்தவர்கள் எத்தனை பேர்கள்? அவர்கள் எல்லாம் கையைத்தூக்கலாம் என்றார். அங்கேயிருந்த அத்தனைபேருமே கையைத் தூக்கிவிட்டார்கள். தலைவருக்கு மிகவும் வெட்கமாய் போய்விட்டது. வீரமுள்ள ஆண்மகன் ஒருவன் கூட இல்லையா என்று தேடினார்கள். பார்த்தால் ஒரு ஓரத்தில் ஒருவர் கையைத் தூக்காமல் உட்கார்ந்திருந்தார். பரவாயில்லையே இதோ ஒருவர்தைரியமாக உட்கார்ந்திருக்கிறாரே என்று சொல்லி அவரிடம் போனார்கள். அதற்கு அவர் ஹி! அவசொல்லாமல் எப்படி? என் சம்சாரத்தைக் கேட்காமல் எப்படி நான் கையைத் தூக்கமுடியும்? என்று சொன்னார். குடும்பம் என்கிறது ஒரு விளையாட்டுப் போட்டி மாதிரித்தான், சிலர் அதில் இப்படிச் சாமர்த்தியமாக விளையாடி ஜெயித்து விடுகிறார்கள். □

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# 50 வருடங்களாக செய்து முடிக்கப்படாதவற்றை நாம் நிறைவேற்றியுள்ளோம்

### வலி. கிழ. பிர. சபை தலைவர் தெரிவிப்பு

(கோப்பாய்)

வலி. கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் கடந்த ஐம்பது வருடங்களாக செய்துமுடிக்கப்படாத வேலைகளை கடந்த ஐந்து வருட காலத்தில் நாம் செய்து முடித்துள்ளோம். இவ்வாறு வலி. கிழக்கு பிரதேச சபைத் தலைவர் பூ. குணசிங்கம்தெரிவித்தார். மேற்படி சபையில் இடம்பெற்ற மாதாந்தக் கூட்டத்தில்உரையாற்றும் போது தெரிவித்தார்.

மேலும் கூறுகையில்; பின்தங்கிய பகுதிகளில் பெருமளவு வீதிகளை நாம் திருத்தி அமைத்துள்ளோம் ஆனால் எம்மீது வசை பாடுவது குறித்து நாம் கவலைப்படப் போவதில்லை.

ஜனநாயகநாடுஒன்றில் இது எல்லாம் சர்வசாதாரணம். இதற்காக எமது அபிவிருத்திப் பணிநிறுத்தப்படமாட்டாது.

பசு வதை விடயத்தில் வலி கிழக்குப் பிரதேசசபை நியாயமாகவே செயற்படும் என்று சபையின் மற்றொரு உறுப்பினரான மா. தர்மராசா தெரிவித்தார்.

இதேவேளை வலி கிழக்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பல வீதிகள் திருத்தப்பட்டுக் கொண்டிருக்க நீர்வேலி தச்சர் மடம் பிரதான ஒழுங்கை மட்டும் திருத்தப்படாமல் திட்டமிட்டரீதியில் ஒதுக்கப்படுவதாக அப்பகுதி மக்கள் பலத்த அதிருப்தி வெளியிட்டிருப்பதும் இங்குசுட்டிக்காட்டத்தக்கது.

(க-79)

# வடமராட்சிக் கடலில் மீன்பிடிக்க புதிய நடைமுறைகள் அமுல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிக் கடற்பரப்பில் தொழில் புரிவதற்கு புதிய நடைமுறைகளை படையினர் விதித்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை இராணுவ இணைப்பதிகாரியினால் நடத்தப்பட்ட மீனவர்களுக்கான கூட்டத்தில் புதிய நடைமுறைகள்குறித்து விளக்கப்பட்டது.

இதன் பிரகாரம்,

கடலில் மீன்பிடிப்பதற்கு பயன்படுத்தப்படும் கட்டுமர உரிமையாளர்கள் கட்டுமரத்திற்கு அனுமதிப் பத்திரம் பெறுதல்,

கடலில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவோர் அனுமதி பெறுதல்,

தொண்டைமானாறில் இருந்து திக்கம் சந்தி வரையானதும், பருத்தித்துறை துறைமுகத்தை அண்டியதுமான கடற் பிரதேசத்தில் மீன்பிடிப்பதை தடை செய்தல்,

ஏனைய கடற்பிரதேசத்தில் கரையில் இருந்து 500 மீற்றர் தூரத்திற்கு அப்பால் மீன்பிடிப்பதைத் தடை செய்தல்

கட்டுமரங்களுக்கு இலக்கமிடுவதுடன், கரையில் நிறுத்தப்படும் கட்டு மரங்களுக்கு அருகில் பலகை நாட்டுதல் ஆகிய புதிய நடைமுறைகள் அறிவிக்கப்பட்டதுடன், இந் நடைமுறைகள் இம்மாதம் முதலாம் திகதியில் இருந்து அமுல்படுத்தப்பட்டுள்ளன,

இதே வேளை,

கடந்த சனியன்று பருத்தித்துறைக் கடற்பகுதியில் வள்ளத்தில் ஏற்பட்ட குண்டு வெடிப்பை அடுத்தே இப்புதிய நடைமுறைகள் அமுல்படுத்தப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-23,43,52)

## திருப்பி அனுப்பப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகப்பகுதியில் மோதல் ஒன்றிற்கு தயாராக நின்றமாணவன் ஒருவர் மேற்படி பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தராலும், சிரேஷ்ட மாணவர்களினாலும் அறிவுரைகூறப்பட்டுதிருப்பிஅனுப்பப்பட்டார். (வ-04-43)

## பணிப்பாளர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

ஆங்கிலத் தேசிய டிப்ளோமா (NDE) (மாலை நேர, முழு நேர) பயிற்சி நெறியை யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் பயின்றவர்களையும், யாழ். உயர் தொழில் நுட்பக் கல்லூரியில் பயின்றவர்களையும் உயர் தொழில்நுட்பநிறுவனமண்டபத்தில்எதிர்வரும் சனிக்கிழமை காலை 11. 00 மணிக்கு நடைபெறவுள்ள கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு மேற்படிநிறுவனப் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (க)

## படையினர் துண்டுப் பிரசுரம் விநியோகம்

(மட்டக்களப்பு)

விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு வழங்க வேண்டாமென கோரும் துண்டுப் பிரசுரங்களை மட்டக்களப்பில் படையினர் விநியோகித்து வருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பில் போராளிகளாக இணைத்துக் கொள்ளும் இளைஞர் யுவதிகளின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருவதாக செய்திகள் வருவதை ஒட்டியே படையினரின் இத்தகைய துண்டுப்பிரசுரங்களை விநியோகித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது, (க-இ)

## பரிசீலனைக் கூட்டம்

(கோப்பாய்)

நிவாரண விநியோகம் தொடர்பான பரிசீலனைக் கூட்டம் கோப்பாய் தெற்கு கிராமசேவையாளர் பிரிவில் கிராம உத்தியோகத்தர் எஸ் தயாபரன் தலைமையில் நேற்றுமுன்தினம் 3.00மணி, கோப்பாய் நாவலர்வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நிவாரணம் பெறும் குடும்பங்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் மற்றும் நிவாரணப் பொருட்கள் விநியோகத்தில் உள்ள குறைபாடுகள்பற்றி ஆராயப்பட்டது.

கூட்டத்தில் வலிகிழக்கு பிரதேசசபைத் தலைவர் பூ' குணசிங்கம் உபதலைவர் யு. எல். ஏ. ரவி ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர். (இ)

## ★ பருத்தித்துறை சம்பவம் தடுத்து வைக்கப்பட்டோர் நீதிமன்றில் ஆஜர்

(புலோலி)

பருத்தித்துறை கடற்பகுதியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக தடுத்து வைக்கப்பட்டிருந்த16 பேரும் நேற்று முன்தினம் மாலைபருத்தித்துறை நீதிமன்றில் நீதிவான் அன்னலிங்கம் பிறேம்சங்கர் முன்னிலையில் பருத்தித்துறை பொலிஸாரால் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களில் 11 பேரை விடுதலை செய்த நீதிவான் ஏனைய 5 பேரையும் எதிர் வரும் ஒக்டோபர் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

அந்தோனிப்பிள்ளை சிறிராஜ் (வியாபாரிமூலை), மரியராஜ் ஜெயரஞ்சன் (சக்கோட்டை), அன்ரனி ஜெயராஜா (சக்கோட்டை), தேவதிரவியம் தவரட்ணம் (சக்கோட்டை), அன்ரனி றொபேட்கெனடி (சக்கோட்டை)ஆகிய 5 பேருமே தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களாவர். (க-5-52)

## செம்மணிப் படுகொலை விவகாரம் விசாரணை அறிக்கையை மன்றில் சமர்ப்பிக்கவும்

### நீதிவான் உத்தரவு

(கொழும்பு)

செம்மணிப் படுகொலைகள் தொடர்பானவிசாரணை அறிக்கை மற்றும் மரபணுப் பரிசோதனை அறிக்கை என்பவற்றை ஒக்டோபர் 30ந் திகதி கொழும்பு நீதி மன்றில் சமர்ப்பிக்க வேண்டுமென நீதிபதி ஏ.ஆர்.ஆர். ஹியந்தொடவ உத்தரவிட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் செம்மணி புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது எதிரிகளுக்குஎதிராக வழக்குத் தாக்கல செய்வது தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனையை கேட்டுள்ளதாக இரகசியப் பொலிஸார் நீதிவானிடம் தெரிவித்தனர்.

மேற்படி விசாரணை அறிக்கைகளை மன்றில் சமர்ப்பிக்க காலஅவகாசம் வேண்டுமென பொலிஸார் நீதிவானிடம் கோரியதை அடுத்து எதிர் வரும் ஒக்டோபர் 30ம் திகதி அவ்வறிக்கைகளை மன்றில் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார், (க-09)

## விடுதலை செய்யப்பட்டவர் மீண்டும் கைதானார்

### நீர்கொழும்பில் சம்பவம்

[கொழும்பு]

நீர்கொழும்புச் சிறைச்சாலையில் இருந்து விடுதலையாகிவெளியேவந்தவர்சிறைச்சாலை வாசலில் வைத்து நீர்கொழும்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படிநபர்குடிவரவுகுடியகல்வுச் சட்டத்தின் கீழ்கைது செய்யப்பட்டு நீர்கொழும்புச் சிறையில் ஆறுமாத காலம் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

நேற்றுமுன்தினம் விடுதலையாகி வெளியே வந்தபோது சிறைச்சாலை வாசலில் காத்திருந்த பொலிஸார் அவரை மீண்டும் கைது செய்தனர்.

வெளிநாடுகளில் அவர் விடுதலைப்புலிகளுக்குச் சார்பாக பிரசார நடவடிக்கையில் ஈடுபடுபவரென நீர்கொழும்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ)

## படையினர் தாக்குதலில் இருவர் பலியாம்

### படைத் தரப்பு தெரிவிப்பு

[கொழும்பு]

தென்மராட்சியின் எழுதுமட்டுவாள் பகுதியில் ரோந்து சென்றபடையினர்விடுதலைப் புலிகள்எனக்கருதப்படுவோர் மீது மேற்கொண்ட தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டதாக படைத்தரப்பு நேற்று தெரிவித்தது.

நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம் பெற்றதாகவும் எதிர்பாராமல் ஏற்பட்ட சந்திப்பின் போதே இத்தாக்குதல்இடம் பெற்றதாகபடைத்தரப்பு மேலும் தெரிவித்துள்ளது. [க]

# ஐ.நா விமானங்களுக்கு தலிபான் மிரட்டல்

(இஸ்லாமபாத்)
பாகிஸ்தானுக்கும் ஆப்கானிஸ்தானுக்குமிடையே பறக்கும் ஐ நா விமானங்களைத் தகர்க்கப் போவதாக தலிபான் மிரட்டியுள்ளது.

இஸ்லாமபாத் விமான நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்திலேயே இதனைத் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து பாகிஸ்தான் விமான நிலையங்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதாகவும் குறிப்பாக இஸ்லாமபாத் விமான நிலையத்தில் பலத்த பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இஸ்லாமபாத் மதில்கள் நுழைவாயில்கள் சோதனையிடப்பட்டு குண்டுகள் வைக்கப்படவில்லை என்ற உறுதியும் அளிக்கப்பட்டுள்ளது.

தலிபான் மீது ஐ:நா : பொருளாதாரத் தடை விதித்தமைக்கு பழி வாங்கும் நோக்குடனேயே விடுவிக்கப்பட்டிருப்பதாக நம்பப்படுகிறது. (து)

# தென்னாபிரிக்க தேசிய பூங்காவில் தீவிபத்து; 17பேர் உடல் கருகிப் பலி

[பிறிட்டோறியா]
தென்னாபிரிக்கா குருதே தேசிய பூங்கா ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 17 பேர் பலியானதுடன் 20 பேருக்கு மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

இவ்விபத்துக்கான காரணம் இது வரை கண்டறியப்படாத போதிலும் மின் ஒழுக்கு காரணமாக ஏற்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதே வேளை பூங்காவில் காவல் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இருவருக்கும் வேறு ஒரு குழுவினருக்கும் வாய்த் தர்க்கம் இடம்பெற்றதாகவும் பின்னர் அதுகைகலப்பில் முடிந்த சில நேரத்தில் திடீரென தீ பரவிக்கொண்டதாகவும் இன்னுமொரு தகவல் தெரிவிக்கின்றது. (உ,7)

# நைல் நதிபெருக்கெடுப்பு எகிப்திற்கு சேதமில்லை

(லண்டன்)
நைல் நதியில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கினால் சூடானில் 70 ஆயிரம் ஏக்கர் பயிர்ச்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

எனினும் அஸ்பார் அணைக்கட்டினால் எகிப்திற்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை என எகிப்தின் நீர் வளத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

வருடாவருடம், பெரும் மழைவீழ்ச்சியாலும்' நைல் நதி பெருக்கெடுப்பினாலும் சூடான .ஸ்பெயின் போன்ற நாடுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுவருகின்றது.

அஸ்பார் அணைக்கட்டினால் எகிப்திற்குஒரு போதும் அழிவு ஏற்படவில்லை எனவும் நீர் வளத்துறை அதிகாரி தெரிவித்தார். (உ-7)

## உலக தரிசனம்

# மருத்துவ உலகின் மற்றொரு சாதனை

[வாஷிங்டன்]
இயற்கையான மனித இரத்தத்திற்கு பதிலாக செயற்கை இரத்தத்தைஅமெரிக்கா விஸ்கான்சின் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

மனித உடலின் உறுப்புக்களாக வளரும மூல உயிரணுக்களிலிருந்து மனித இரத்தத்தின் உயிரணுக்களை உருவாக்க முடிந்துளளதாகஅவர்கள் தெரிவித்துள்ளனர்.

இக்கண்டு பிடிப்பு வைத்தியத்துறையில் புதிய பலபரிணாமங்களைஏற்படுத்துமென அவர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். [உ-5]

# சட்டவிரோத குடியேற்றவாசிகள் தடுத்துவைப்பு

(இலண்டன்)
ஏசியன்தீவுகளுக்குள் நுழைய முயன்ற சட்டவிரோத குடியேற்றவாசிகள்குழுக்கள் இரண்டினை கிரேக்க கடலோர காவல் படையினர் தடுத்துவைத்துள்ளனர்.

இக்குழுக்களில் நாற்பத்தைந்து பேர் அடங்கியுள்ளனர்.

இவர்கள் துருக்கியின் கரையோரப் பகுதிகளில் இருந்தே சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (செ)

## பாதுகாப்புஅமைச்சு மறுப்பு

(கொழும்பு)
யாழ். குடாநாட்டை எதிர் வரும் 26 ஆம் திகதி புலிகள் கைப்பற்றத்திட்ட மிட்டிருப்பதாக புலனாய்வுப் பிரிவு எச்சரிக்கை விடுத்ததை பாதுகாப்பு தலைமைச் செயலகம மறுத்துள்ளது.

## ஏவுகணைப் பொருட்களை

# நாடுகளுக்கு வழங்குவதை சீனா நிறுத்த வேண்டும்

## அமெரிக்கா அழுத்தம்

[நீயூயோர்க்]
சீனா அணுவாயுத ஏவுகணைப் பொருட்களை மற்றைய நாடுகளுக்கு வழங்குவதை நிறுத்த வேண்டுமென்று அமெரிக்கா கேட்டுள்ளது.

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூபுஷ்சின் சீனவிஜயம வெற்றி பெறவேண்டுமாயின் தமது கோரிக்கைகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்றுஅமெரிக்கா கேட்டுக் கொண்டுள்ளது.

அணுவாயுதத் தொழில் நுட்பத்தை ஏற்றுமதி செய்வதை நிறுத்த வேண்டும். அணுவாயுத ஏவுகணை விபரங்களை மற்றைய நாடுகளுக்கு தெரிவிக்காமல்விடுவது 2000 ஆண்டுக்கு முற்பட்ட ஆயுதகொடுப்பனவுகள் வாக்குறுதி வரம்புக்கு அப்பாற்பட்டதென்று சொல்லக் கூடாது ஆகிய கோரிக்கைகளை அமெரிக்கா சீனாவிடம் முன்வைத்துள்ளது. [து]

# கிறிஸ்தவ மதத்தை பரப்ப முற்பட்டோர் மீது விசாரணை ஆரம்பம்

(காபூல்)
ஆப்கானிஸ்தானில் கிறிஸ்தவ மதத்தைப் பரப்ப முற்பட்ட 8 பேரின் விசாரணைகள் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தலிபான் ஆட்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும், குற்றம் சாட்டப்பட்ட யெர்மனியர், அவுஸ்திரேலியர் அமெரிக்கர்கள் போன்றவர்கள் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டது பற்றி இதுவரை எதுவும் தெரியவில்லை.

இதே வேளை, ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சியின் கீழ் இஸ்லாமிய மதத்தைத் தவிர வேறு மதத்தினை போதிக்க முற்படுபவர்களுக்கு மரண தண்டனை வழங்கும் அதிகார சட்டம் ஏற்கனவே இருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-7)

# மிகப்பெரும் வைக்கோல் சந்தையில் தீ விபத்து

[நாசொன்]
மகாமஸ் தீவுகளின் தலைநகரில் உள்ள உலகப்பிரசித்தி பெற்ற வைக்கோல் சந்தை தீப்பிடித்துக் கொண்டதில் 2 இலட்சத்திற்கும் அதிகம் டொலர் நட்டம் ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை தலை நகரான நாசொனின் வைக்கோல் சந்தையின் விநியோகப் பகுதிக்குள் தீப்பிடித்துக் கொண்ட சில மணி நேரத்திற்குள் களஞ்சியப் பகுதி முழுவதிலும் பரவியது.

இதனைத் தடுக்க முடியாத சந்தையில் ஊழியர்கள மற்றும் வாடிக்கையாளர் தத்தம உயிரைக் காப்பாற்றிக் கொள்ள உடனே வெளியேறி விட்டதாகத் தெரியவந்துள்ளது.

இச் சம்பவத்தில் ஒருவர் கூட தீக் காயங்களுக்குளளாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. [உ-7]

# தீவிரவாதிகள் கொண்டுசென்ற குண்டு தற்செயலாக வெடித்தது

## ஆந்திரப் பிரதேச ரயில்நிலையத்தில் சம்பவம்

(புதுடில்லி)
இந்தியாவின் ஆந்திரப் பிரதேசத்தில் ரயில்நிலையம் ஒன்றில் ஏற்பட்ட குண்டுவெடிப்பில் 3 பேர் பலியானதுடன் 3 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

மேறபடி ரயில்நிலையத்தில் இளைஞர்கள மூவர் கொண்டு சென்ற பட்டி தற்செயலாக கீழேவிழுந்ததால் அதனுள் இருந்த குண்டு வெடித்ததில் இளைஞர் மூவர் உடல்சிதறி பலியாகியுளளனர் எனநேரில் கண்ட பொலிஸார் சாட்சியமளித்துள்ளனர்.

இது தொடர்பாக பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் பாகிஸ்தான் தீவிரவாத அமைப்பு ஒன்றின் ஆதரவுடன் இந்தியாவில் தடை செய்யப்பட்ட தீவிரவாத அமைப்பு ஒன்றே இக்குண்டை கொண்டு சென்றுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்தியாவின் முக்கிய தலைவர்களை குறிவைத்து இக்குண்டு கொண்டுசெல்லப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது

இக்குண்டுவெடிப்பின் பின்னர் ஆந்திரப் பிரதேசமும் அதனை அண்டிய பகுதிகளும் அதிதீவிர பாதுகாப்பிற்கு உட்படுத்தப்பட்டுள்ளன. (உ-7)

# மீண்டும் பிஜியின் பிரதமராகும் வாய்ப்பு மகேந்திர சௌத்ரிக்கு

## சதிகார ஜோர்ஜ் ஸ்பெயிட் மண்கவ்வினார்

(சுபா)
பீஜியில் கடந்தவாரம் நடைபெற்ற பொதுத்தேர்தலில் பதவி கவிழ்க்கப்பட்ட முன்னாள் பிரதமர் மகேந்திர சௌத்ரி மீண்டும் வெற்றி பெற்றுள்ளார்.

மகேந்திர சௌத்ரியும் சதிப்புரட்சி மேற்கொண்ட ஜோர்ஜ் ஸ்பெயிட்டும் தங்கள ஆசனங்களில் வெற்றியீட்டியிருந்தாலும் மகேந்திர சௌத்ரியே அமோக வெற்றியீட்டி பிரதமர் பதவியை மீண்டும் ஏற்கும் தகுதியைப் பெற்றுள்ளார்.

தற்போது சிறைவாசம் அனுபவித்துவரும் ஜோர்ஜ் ஸ்பெயிட் நாடாளு மன்றத திற்குச்செல்ல அனுமதிக்கப்படுவாரா என்றகேள்வி எழுந்துள்ளது.

கடந்தவருடம், பிஜியின் இந்திய வம்சாவளி பிரதமரான மகேந்திர சௌத்ரியை சதிப்புரட்சி மூலம் பதவி கவிழ்த்து அவரின் ஆதரவாளர்களைசிறைப்பிடித்து வைத்துள்ள ஜோர்ஜ் ஸ்பெயிட் நாடாளுமன்றில நுழைவதற்கு சட்டத்தில் இடமில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ-7)

# செத்தல் மிளகாய் விலை உயரும்

(கொழும்பு)
ஒரு கிலோ செத்தல் மிளகாயின் விலை 145 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது.

இவ் விலை அதிகரிப்பு உடன் நடை முறைக்கு வருமெனவும் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் அறிவித்துள்ளது. ஒரு கிலோ செத்தல் மிளகாய் முன்னர் 125 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (உ-5)

# பஸ் பழுது

(யாழ்ப்பாணம்)
நெடுந்தீவுப் பிரதேசத்தில் பயண சேவையில் ஈடுபட்டு வந்த வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ் பழுதடைந்துள்ளது. இதனால் அப்பகுதி மக்கள் உள்ளூர் பயணத்தில் பெரும் சிரமங்களை எதிர் நோக்கியுள்ளனர்

மிகப் பழமைவாய்ந்த பஸ்சேவைக்கு விடப்பட்டுள்ளதால் இவ் பஸ் அடிக்கடி பழுதடைவது வழமையான விடயமாகி விட்டதென அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். [ந]

# 41 அதிபர்களுக்கு புதுடில்லியில் பயிற்சி

## இருவர் மாத்திரமே தமிழர்கள்

(புலோலி)
கல்வியமைச்சின் இடைநிலைக்கல்வி நவீனமயப்படுத்தும் திட்டத்தின் கீழ்இலங்கையிலுள்ள 41 அதிபர்கள் புதுடில்லியிலுள்ள நீப்பா நிறுவனத்தில் பயிற்சி பெறுவதற்காக இந்தியா செல்லவுள்ளனர்.

இப்பயிற்சி இம்மாதம்10-ம் திகதியிலிருந்து 28-ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இலங்கையிலிருந்து செல்லும் அதிபர்கள் இப்பயிற்சிகளைப் பெற்றுக் கொள்வதற்கான சகல ஒழுங்குகளையும் கல்வியமைச்சின் வெளிநாட்டு விவகாரங்களுக்கான பிரிவுச் செயலாளர் மேற்கொண்டுள்ளார்.

இப்பயிற்சி நெறியில் பங்கு கொள்வதற்காக வடக்கு-கிழக்கு மாகாணத்திலிருந்து 6 அதிபர்களை வடக்கு-கிழக்கு மாகாண கல்வியமைச்சு தெரிவு செய்துள்ளது.

இதில் வட மாகாணத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த் பெண்கள் உயர்தரம் பாடசாலை அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசனும் கிழக்கு மாகாணத்தில் இருந்து மண்டூர் மகாவித்தியாலய அதிபருமாக இரு தமிழ் அதிபர்களும் இரண்டு, முஸ்லிம் அதிபர்களும் இரண்டு சிங்கள அதிபர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஏனைய ஏழுமாகாணங்களிலிருந்தும் தலா 5 சிங்கள அதிபர்கள் வீதம் 35 அதிபர்களும் இப்பயிற்சிகளைப் பெற்றுக் கொள்கிறார்கள். [உ-52]

# ஒன்றுகூடல்

[மந்திகை]
வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலக அபிவிருத்திதொண்டர்களின் ஒன்றுகூடல் எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை தேவரையாளி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (உ-23)

ஆகு ஆ[று]அள[வு]இட்டி[து]
ஆயினுங்கேடில்லை
போகுஆ[று] அகலாக்கடை
- குறள்

# வலம்புரி

## கரடி பிடித்த கதையாச்சு

1978 இல் கொண்டு வரப்பட்ட புதியஅரசியலமைப்பு பின் தங்கியநிலையிலுள்ள இலங்கையின் அரசியலில் பெரும் குழப்பத்தையும் கலகத்தையுமே ஏற்படுத்துமென் பதை இப்போது உணர முடிகிறது. சரிபோகட்டுமே அரசியலில் யாப்பை மாற்றிவிட்டால் எல்லாம் சரியாகிவிடுமென்றால் அதுவும் முடியாதாம், என் செய்வது. இலங்கை அரசியலைச் சிந்திக்கும் போதெல்லாம் கரடியைப் பிடித்தவனின் கதையே ஞாபகத்திற்கு வருகிறது.

இரண்டு நண்பர்கள் ஆற்றில நீராடிக்கொண்டிருந்தார்கள். அச் சமயம் ஓர் சாக்கு மூடையொன்று ஆற்றில் அடிபட்டுச் சென்றது. இதனைப்பார்த்த நண்பர்கள் ஏதோ பெறுமதியான பொருளொன்றே அடிபட்டுச் செல்வதாக நினைத்து அந்த மூடையை நோக்கி இருவரும் வேகமாக நீந்தினார்கள். ஒருவன் களைத்துக் கரைதிரும்பினான், மற்றவன் பொருளாசையால் நீந்திக்கொண்டேயிருந்தான், மூடையும் ஆற்றில் அடிபட்டுச் செல்கிறது. நீச்சலை வேகப்படுத்தி ஒரு மாதிரியாக மிதக்கும் மூடையைப் பிடித்து விட்டான்.

இப்போது அவனும், மூடையும் ஆற்றில் அடிபட்டுச் செல்கின்றன. கரையிலே களைத்துப் போய் நின்ற நண்பன், ஆற்றில் அடிபட்டுச் செல்லும் நண்பனுக்குக் குரல் கொடுத்தான். நண்பா! நமக்கு மூடை எதுவும் வேண்டாம் அதைவிட்டுக் கரை சேர்ந்துவிடு என்றான். மூடையோடு அடிபட்டுச் செல்பவனிடமிருந்து பதில் வந்தது. நண்பனே! நான் விட்டாலும் அது விடாதாம், நான் மூடையெனப் பிடித்தது கரடி. இப்போ நான் கையை விட்டாலும் கரடி என்னை விடுவதாக இல்லை என்றான்.

இது போன்று தான் எமது அரசியலமைப்பும் பதவியில் அசையாமல் நிலைத்து நிற்பதற்காக ஜே.ஆர். ஜெயவர்த்தனாவால கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பு இப்போது நாட்டைப் பற்றிப்பிடித்து விட்டது.

அவ்வரசியலமைப்பை மாற்றுவதென முடிவெடுத்தாலும் அவ்வாறு செய்யமுடியாதளவிற்கு அரசியலமைப்பு கரடி போன்று பிடித்துவிட்டது.

இவற்றுக்குக் காரணம் யார் ஆட்சியில் ஏறுகிறார்களோ அவர்களுக்குக் கிடைக்கும் அதிகாரத்தை அவர்கள் ஒரு போதும் விட்டுக்கொடுக்கப் போவதில்லை.

# ஞாபகசக்தி விருத்திக்கு மன ஒருமைப்பாடும் மற்றைய வழிகளைப் போற் பங்களிக்கிறது

**எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி**

மனம், ஞாபகம், உணர்ச்சி என்றெல்லாம் கதைக்கின்றோம், பேசுகின்றோம். ஆனால் கண்ணுக்குப் புலனாகாஇவற்றின் செயற்பாடு தான் என்ன? ஆம்; மனிதனையும் அவன் வாழ்வின் ஒவ்வொரு படி நிலைகளையும் ஆட்டிப் படைக்குமஇவற்றின் சக்தியைச் சொல்லில் அளவிடமுடியாது. மனம் ஒரு குரங்குஎன்பார்கள். மனத்தில் பல்வேறு எண்ணங்கள் கருக்கொண்டு மனிதனை ஆள்கின்றன. எண்ணங்களுக்குத் தகுந்த வரன்முறைகளில் வடிகால தேடுவதிலேயே மனிதனின் வெற்றி தங்கியுள்ளது.

### ஞாபகம்

ஞாபகம்என்றவுடன் 'ஞாபகம் இருக்கின்றதா அன்பே ஞாபகம் இருக்கிறதா . . . ' என்ற சினிமா வரிகள் ஞாபகத்திற்கு வருகின்றன. காலை உண்ட உணவையே மதியம் மறந்துவிடும் ஞாபகசாலிகளையும் நமமத்தியில் காண முடிகிறது தானே?

ஞாபகம் அல்லது நினைவாற்றல் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் மற்றும் பரீட்சை நோக்கில் எவ்வாறு முக்கியத்துவம் பெறுகின்றது? பரீட்சையில் வெற்றி பெறுவதும் அதிகூடிய மதிப்பெண்களை ஈட்டிக்கொள்வதுமே கற்கும் மாணவன் ஒவ்வொருவனதும் இலட்சியமாக இருக்கிறது. ஆனால் அவ்வாறு எல்லோரும் தமது குறிக்கோளை அடைய முடிகிறதா?

பரீட்சைக்குக் கற்றவற்றை மீள ஞாபகப்படுத்தல் அவசியமாகின்றது. வகுப்பறையில், மாணவன் உள்வாங்கும் விடயங்களை பரீட்சை மண்டபத்தில் வெவ்வேறு கோணங்களில் எதிர்பார்க்கிறார்கள். எனவே அக்குறுகிய நேரத்தில் தான் உள்வாங்கிய விடயத்தை தேவையான வடிவில் திருப்திகரமாக வெளிக்கொணர முடியாமல் திண்டாடுகின்றபரீட்சார்த்திகூடிய மதிப் பெண்களைப் பெறுவதென்பது இயலாத காரியமாகின்றது.

### இருவகை ஞாபகம்

ஞாபகத்தை குறுங்கால ஞாபகம், நீண்ட கால ஞாபகம் என்று உளவியலாளர்கள் இருவகைப் படுத்துகிறார்கள். பரீட்சை நோக்கல் பெரிதும் வேண்டப்படுவது நீண்டகால ஞாபகமே. ஒரு சராசரி மனிதனின் குறுங்கால ஞாபகத்தின் கொள்ளளவு (Capacity, 7+ அல்லது -2 எனக்கணிப்பிட்டிருக்கிறார்கள். அதாவது 5க்கும் 9 க்கும் இடையே இக்கொள்ளளவு காணப்படும். இது சிலரில் உச்சமாகவும் சிலரில் மந்தமாகவும் காணப்படுதலை அவர்களின் பரம்பரை அலகுகள், சூழல் காரணிகள் என்பன தீர்மானிக்கின்றன.

மாணவர்கள்பலதரப்பட்ட விடயங்களையும் வகுப்பறையில் கற்கிறார்கள். அவை மூளையில் குறுங்காலஞாபகப் பகுதி என்னும் பகுதியில் பதியப்படுகின்றன. எனினும் பல விடய தானங்கள் ஆவியாகி விடுகின்றன. கற்ற விடயங்களை ஒழுங்குபடுத்தி மூளையின் நீண்டகாலஞாபகப்பகுதிக்கு அனுப்பமாணவர் முயலவேண்டும். அவை தான் பரீட்சை நோக்கில் பெரிதும் வேண்டப்படுகின்றன. அப்போது தான் உடனடியாகத் தேவையான விடயத்தை வேளை மூளைக்குவரவழைக்க முடியும். இதற்கு ஓர்உதாரணமாக ஒழுங்குபடுத்தப்பட்ட 'நூலகம்' ஒன்றையும் அதன் 'நூலகரையும்' நீண்டகால ஞாபகப்பகுதிக்கும் 'பரீட்சார்த்திக்கும்' உவமானமாகக் கொள்வோம். நாம் நூலகரிடம் சென்று குறித்த ஓர் புத்தகத்தை நாடும் போதுஅவர் எவ்வித சிரமமுமின்றி பதிவுப் புத்தகத்தின் துணையுடன் குறித்த அலுமாரியை நாடிச்சென்று அதில் குறித்ததட்டில் இருக்கும் அப்புத்தகத்தை எடுத்து எமக்குத் தருகிறார். மாறாக ஒழுங்குபடுத்தப்படாது குலைந்து கிடக்கும் புத்தகக்குவியலில் குறித்தஒரு புத்தகத்தைத்தேடுதல் எவ்வளவு சிரமமானது என்பதை ஒரு கணம் நீங்களே சிந்தித்துப்பாருங்கள் இச்செயற்பாடே நமது மூளையிலும் நிகழ்கிறது.

### போதிய இடைவெளி

மாணவர்கற்கும் போது பாடங்களுக்கிடையில் போதிய இடை வெளி நேரம் கொடுத்த பின்மற்றையபாடவிதானத்தைக்கற்பதுசிறந்தது. ஞாபகத்திறனைக் கூட்டுவதற்கு பாடவிதானத்தைப் பிரித்தும் வகுத்தும் அலசி ஆராய்ந்து அவற்றைப் பல கிளைகளாகப் பிரித்து ஞாபகமூட்டல் பாரிய வெற்றியளிக்கும் என ஆராய்ச்சிகள் வாயிலாகக் கண்டறியப்பட்டுள்ளது. கற்றவற்றை மீட்டல் போதிய ஓய்வு (நித்திரை) என்பனவும் ஞாபக சக்தியை அதிகரிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாக வுள்ளன. குழுவாகக் கற்றலும் (Group Study) ஓரளவு நன்மைபயப்பதாகவே உள்ளது.

குறுங்கால ஞாபகப்பகுதியில் உள்ள அணுக்களை (விடயகுறிப்புகள), நீண்டகால ஞாபகப்பகுதிக்கு அனுப்பாமல் தொடர்ந்து கற்பதால் உருவாகும் பாதிப்பை உதாரணம் ஒன்றின் மூலம் நோக்கலாம். ஒரு டம்ளரில் நிரம்ப 'பன்ரா' சோடா உள்ளதென வைத்துக்கொள்வோம்.

இப்போது குறுங்கால ஞாபகம் நிரம்பிஉள்ளது. இதற்குள் மேலும் கொக்காகோலாவை ஊற்றுகிறோம். இப்போது என்ன நடக்கிறது. கொக்காகோலாவுடன் பன்ராவும் சேர்ந்து வழிகிறது. இதே செயற்பாடு தானஎமதுமூளையிலும் நிகழுகிறது.

மாணவன் எவ்வளவு திறமைசாலியாக இருந்தாலும் பரீட்சை என்றவுடனஅவனை ஒருவித பீதி பற்றிக் கொள்கிறது. இதனால் பதற்றமும் உடல உள ரீதியான தாக்கங்களும் சிலருக்கு ஏற்படுகின்றன. இது இயற்கையே ஆயினும் சில வழிமுறைகள் மூலம் அப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்.

### மீட்டல் காலம்

பரீட்சைக்கான மீட்டல் காலமாகக் குறைந்தது ஆறு வாரங்கள ஒதுக்க வேண்டும். இம்மீட்டலுக்கு சூழ்நிலையும் நேரமும் மிகமுக்கியம் ஆகின்றன. சூழ்நிலைஎன்னும்போது மீட்டல்காலங்களில் பரீட்சை எழுதப்போகும் மண்டபத்திலேயே இருந்து மீட்டல் சிறந்தது. இதைவிஞ்ஞான ரீதியாக நிரூபித்துள்ளார்கள். ஆனால் இது எப்போதும் சாத்தியப்படக்கூடியவழி அல்ல. நேரம் என்னும் போது பரீட்சை நடைபெறப்போகும் நேரங்களில் அதாவது காலையா, மாலையா என்பதைப் பொறுத்து மீட்டல் செய்தல் உசிதமானது. பரீட்சைகள பொதுவாக மூன்று மணி நேரம் நடைபெறுவதனால் தொடர்ந்து மூன்று மணி நேரம் மீட்டல் வேண்டும். இதற்கொரு உதாரணமாக வீதி ஓட்டத்தில் பங்குகொள்ளும் வீரனொருவன் அவ்வழியால் நேரங்குறித்து மீண்டும் ஓடிப் பயிற்சியைப் பெற்றுக் கொண்டால் மாத்திரமே குறித்த தினத்தில் தனது வெற்றி இலக்கை அடைய முடியும்.


சில மாணவர்கள் தாமாகவே குறிப்புகளைத் தயாரித்துப் படிக்கிறார்கள். இது ஒரு சிறந்த வழியாகும். கடந்த கால மாதிரிவினாக்களை மீட்கும் போது பாடவிதான ரீதியாகவும் முழுவினாத்தாள் மீட்டல் செய்ய வேண்டும். இதன் போது குறித்த பாடத்தில் தெளிவும் உறுதியும் பிறக்கின்றன.

### மனம் ஒருமுகப்படல்

இவை தவிர வேறு சில வழிமுறைகளும் கற்றலை இலகுவாக்குவதிலும் ஞாபகப்படுத்துவதிலும் செல்வாக்குச் செலுத்துகின்றன. தியானம் (இதற்கு மனதை அழித்தல்/கட்டுதல் எனப்பொருள் கொண்டாலும்) மனதை ஒருமுகப்படுத்தும்வழியாகும். அலைபாயும் மனதைக்கட்டுப்படுத்த மூச்சை ஆழமாகஉள் இழுத்து வெளி விடுவதன் மூலம் ஒரு சாந்த நிலையை அடைய முடியும். அதன் பின் கற்றலைத் தொடரலாம். மேலும் விட்டமின் 'சி' பீகோ, முதலிய குளிசைகளும் புரத உணவுகளும் ஞாபகசக்திக்கு பெரிதும் நன்மையளிக்கின்றன.

மேலை நாடுகளில் திருமணமான மாணவர்கள் பரீட்சைகளில கூடிய புள்ளிகளைப் பெறுகின்றனராக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இதை விஞ்ஞான ரீதியாகவும் ஆய்வு செய்து நிரூபித்துள்ளார்கள். ஆனால் எமது பிரதேசத்தில் பலவேறு காரணிகளால் இது சாத்தியப்படாது போனாலும் ஆம். பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் திருமணம் முடித்த அப்பா அம்மாக்களை, மாணவர்களாகக் காண்கிறோம். □

## சாயி அருளமுதம்



உங்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் ஆயுட் காலத்தை, உறுதியற்றவர்களையும், வினர்களையும், பலமற்றவர்களையும் தொழுது போற்றுவதில் கழிக்காமல் எல்லாவல்ல மெய்ப்பொருளைப் பற்றிச் சிந்திப்பதிலும், ஆராதிப்பதிலும் செலவிடுங்கள் ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையென்னும் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருப்பது உண்பதற்கும், குடிப்பதற்குமல்ல, அதனைவிட உயர்வானதும் மகத்தானதுமாகிய ஒன்றை அடைவதற்கே; தன்னை அடக்கியாண்டு உண்மைப் பொருளுடன் சங்கமிப்பதற்கேயாகும்.

நன்றி
நாளாந்த நற்சிந்தனை

## நிர்வாக சபை தெரிவு

(சுண்டுகுளி)

யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்க பொதுக் கூட்டம் அண்மையில ஈச்சமோட்டையில் அமைந்துள்ள பணிமனையில் சங்கத் தலைவர் கப்ரின் டி. ஏ. எம். குணசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

நடப்பு வருட ஆட்சிக்குழு உறுப்பினர்கள் தெரிவு தற்காலிக தலைவர் எம். டி. தயாபிரசா தலைமையில் நடை பெற்றபோது, தலைவராக கப்ரின் டி. ஏ. எம். குணசிங்கம், செயலாளராக ஆனோல்ட், பொருளாளராக எம். பிரான்சிஸ், உபதலைவர்களாக எஸ். ஜெகப் அன்ரனிப்பிள்ளை, எம். டி. தயாபிரசா, எம். கே. விமலதாசன், வி. திருஞானசம்பந்தன், கே. நாகேந்திரம், உபசெயலாளராக சி. ஏ. அரவிந்தன், நிர்வாக சபை உறுப்பினர்களாக ரி. றொபேட், கே. ரவீந்திர குமார், எஸ். திவ்வியநாயகம், ரி. றெட்சன், பீ. கருணாகரன், ஜே. றின்ஸ்ரன் ஆகியோர் தெரிவு செய்யப் பட்டனர். (உ-110)

## கூட்டம்

(தென்மராட்சி)

வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் மாதாந்தக் கூட்டம் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு சங்கச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

அதிஷ்டலாபச் சீட்டில் அதிஷ்டம் பார்க்கப்பட்ட பரிசிற்குரியவர்களுக்கு அன்றைய தினம் பரிசில்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (செ-77)

## புனித ஆரோக்கிய அன்னை ஆலய பெருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அஞ்சுனந்தாழ்வு புனித ஆரோக்கிய அன்னை ஆலயபெருவிழா 7ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை கொடியேற்றத்துடன் நவநாட்கள ஆரம்பமாகி தினமும் மாலை 5மணிக்கு திருச் செபமாலையுடன் நடைபெறவுள்ளது.

15ந்திகதி சனிக்கிழமை மாலை 5மணிக்கு நற்கருணைவிழாவும் 16ந்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு திருநாள்திருப்பலியும் தொடர்ந்து திருச்சொருபபவனியும் ஆசீரும் இடம் பெறும். (ம)

# யுத்தத்தை முன்னெடுத்துச் செல்ல பாகிஸ்தானிடம் இருந்து ஆயுதம்

## ஜனாதிபதி முயற்சி

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தை தீவிரமாக முன்னெடுத்துச் செல்வதற்கு பாகிஸ்தானிடம் இருந்து இராணுவ உதவிகளைப்பெற்றுக் கொள்ள ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்காபாகிஸ்தான் ஜனாதிபதி பெர்வஷ் முஷாரப்புடன் பேச்சுவார்த்தை செய்யவுள்ளார்.

அடுத்த மாதம் நியூயோர்க்கில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் பொதுசபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக அங்கு செல்லும்ஜனாதிபதி பாகிஸ்தான் ஜனாதிபதியிடம் இராணுவ உதவிகளை நேரடியாகக் கோரவுள்ளார்.

இந்த இராணுவ உதவிகளில் நவீன போர் ரகவிமானங்களும் தாக்குதல் ஹெலிகளும் அடங்குமென பாகிஸ்தான் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன:

அமெரிக்கத் தயாரிப்பான 'எவ். 16' ரக போர் விமானங்களை வாடகை அடிப்படையில் பெற இலங்கை முயற்சிப்பதாகவும் சீனாவும் பாகிஸ்தானும் இணைந்து தயாரித்துளள போர் விமானங்களைக் கொள்வனவு செய்ய ஜனாதிபதி விரும்புவதாகவும் தெரிவித்த பாகிஸ்தான் இராணுவவட்டாரங் அமெரிக்க- பாகிஸ்தானுக்கிடையிலான உடன்படிக்கையின் பிரகாரம் அமெரிக்காவின் அங்கீகாரம் இன்றி இப்போர் விமானங்களை இலங்கைக்குவாடாகைக்கோ அல்லதுபணத்துக்கோ கொடுக்க முடியாதிருப்பதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (வ)

### நம்பிக்கையில்

நம்பிக்கைஇல்லாத் தீர்மானத்தை இன்றுசமர்ப்பிக்காது அதனை வேறோர் தினத்தில் சமர்ப்பிப்போமென்று ரணில் அறிவித்திருப்பது ஐக்கிய தேசிய கட்சிக்கு கிடைத்த தோல்வி என அரசியல் விமர்சகர்கள் கருத்துவெளியிட்டுள்ளனர். (வ)

### சமாதான

செய்தி ஊடகம் ஒன்றிற்கு அளித்த விசேட பேட்டி ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் அரசு பேசக்கூடாது எனற எந்தநிபந்தனையையும் ஜே.வி பி விதிக்கவில்லை அதே நேரம் சமாதான நடவடிக்கை தொடர வேண்டும் என்பதே ஜே.வி பியின் விருப்பமுமாகும். இந்தசமாதான உடன்படிக்கையும் இப்புரிந்துணர்வொப்பந்தத்தில் இடம் பெற்றுள்ள தென்றும் அவர் மேலும் தெரிவித்தார்; (ந-4)

# 5 மீனவர்களையும் விடுவிக்க யாழ் சிறைச்சாலை முன் உறவினர்கள்ஒன்றுகூடினர்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறைக் கடற்பரப்பில் கைதுசெய்யப்பட்ட மீனவர்களில் விடுவிக்கப்படாமல் இருக்கும் ஐவரையும் விடுவிக்குமாறுகோரி தடுத்து வைக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்று பகல் யாழ். சிறைச்சாலை முன்றலில் கூடி கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்குமாறு வேண்டுகோள் விடுத்தனர்,

கடந்த 1ம் திகதி சனிக்கிழமை பருத்தித்துறைக் கடலில் இடம்பெற்ற குண்டு வெடிப்புசம்பவத்தை அடுத்து இவர்கள் கடற்படையினரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கைதுசெய்யப்பட்ட ஐந்து மீனவர்களின் உறவினாகள பருத்தித்துறை, சக்கோட்டை, மயிலிட்டி, காங்கேசன்துறை சுப்பர்மடம் ஆகிய பகுதிகளில் இருந்து வந்தவர்கள் நேற்றுப்பகல் யாழ் சிறைச்சாலையில் ஒன்றுகூடினர்;

கைது செய்யப்பட்ட 5 மீனவர்களின் விடுதலை தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக அவர்களின்உறவினர்களிடம் வலிமேற்கு பிரதேசசபைத் தலைவர் என்; திரிலோகநாதன் தெரிவித்துள்ளார். (6,7,52)

### தூக்குத்

சிங்அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

1991ம்ஆண்டு மேமாதம் 21ந்திகதி ஸ்ரீபெரும்பதூரில் பெண்ணொருவரின் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் பிரதமர் ராஜீவ்காந்தி உட்பட 16பேர் உடல்சிதறிப் பலியாகினர்.

இவ்வழக்கில் நளினிஎன்ற பெண்ணுக்கும் மரணதண்டனை விதிக்கப்பட்டு பின்னர் அது அவருக்கு ஆயுள்தண்டனையாக்கப்பட்டது. மரண தண்டனைபெற்ற மூன்று பேரும் தமக்கு கருணை காட்டுமாறு கருணைமனுவொன்றை குடியரசுத்தலைவருக்கு எழுதியிருந்தபோதும் அதுதொடர்பாக இன்னமும் பதில் கிடைக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)

### அரசு-ஜே. வி. பி

ஆனால் ஜே.வி.பியினர் இதற்கு முரணாக செயற்படுகின்றனர்.

அரசும் ஜே.வி.பியினரும் கைச்சாத்திட்டுள்ள புரிந்துணர்வு உடன்பாட்டிற்கு மகாநாயக்க தேரர்களின் ஆசீர்வாதம் இருப்பது தமக்கு கவலையளிபபதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-5)

### இந்திய மீனவர்

சாவுககு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து மீனவர்களை விடுவிக்கும் போது காங்கேசன் துறை கடற்படை அதிகாரி ரணவீர, காரைநகர் கடற்படைக் கட்டளை அதிகாரி, ஊர்காவற்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோரை 10ம்திகதி திங்கட்கிழமை யாழ் நீதிமன்றத்தில் பிரசன்னமாகுமாறு நீதிவான் இ. த. விக்கினராசா உத்தரவட்டுளளார். (வ)

### பொ.ஐ.மு

பிரதாய பூர்வமாக ஆரம்பிக்கப் பட்ட இந் நிகழ்ச்சியில் அரசாங்கத்தின சார்பில் அமைச்சர்கள் நிமால்சிறிபாலடிசில்வா, டி. எம். ஜயரத்தின ஆகியோரும் ஜே. வி பியின் சார்பில் அதன்பிரசாரச் செயலாளர்விமல் வீரவன்ச, செயலாளர் ரில்வின் சில்வா ஆகியோரும் கலந்து கொண்டனார்.

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசிற்கும் ஜே.வி.பிக்கும் இடையே இடம் பெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானமை இலங்கையின் அரசியல் வரலாற்றில் பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியுளள தாக அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்; (வ)


JAFFNA TECHNICAL INSTITUTE · SRILANKA · JTI

# Jaffna Technical Institute

JAFFNA - SRILANKA

Regd NO 15251 T.P. 3335

# தொழிற் பயிற்சிகள்

★ **Radio, T. V. and Video Deck Repairing**

சகல இன ரேடியோ, ரீ.வி, வீடியோ டெக் மற்றும் எலக்ரோனிக் உபகரணங்கள் என்பன திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 10 மாதங்கள்)

★ **Motor Rewinding and Electrical Wiring**

சகல இன மோட்டார், (F) பான் ரான்ஸ்போமர்கள் றிவைண்டிங் செய்யும் முறை மற்றும் வீட்டு மின்னிணைப்பு முறை என்பன பயிற்சி அளிக்கப்படும். (காலம் 6 மாதங்கள்)

★ **Motor Cycle Mechanism**

சகல இன மோட்டார்சைக்கிள், நீரிறைக்கும் இயந்திரம் திருத்தும்முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 5 மாதங்கள்)

★ **Air Conditioning and Refrigeration**

சகல இன குளிர்சாதனப்பெட்டி மற்றும் எயார் கொண்டிசன் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சி யளிக்கப்படும். (காலம் 6 மாதம்)

★ **City and Guilds of London Exam**

(1) Power (2) Electronics

புதிய பயிற்சிகள் ஆரம்பம்-
14-09-2001 (கிழமை நாட்களில்) 15-09-2001 (சனி, ஞாயிறு நாட்களில்)

**N. B:-**

★ பயிற்சி நெறிகள் யாவற்றுக்கும் ஒரு வருட முழுநேரச் செய்முறைப் பயிற்சி (Practical Training) அளிக்கப்படும்.

★ பாடசாலை மாணவர்கள், தொழில்புரிவோருக்கு மாலை நேர வகுப்புக்கள் நடைபெறுகின்றன;

★ தனிப்பட்ட வகுப்புக்களில் [Personal Class] கற்க விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

★ 1998 — 1999 ஆண்டில் பயிற்சி நெறிகளையும், செய்முறைப் பயிற்சிகளையும் முடித்துக் கொண்ட மாணவர்களில் இதுவரை சான்றிதழ் பெற்றுக்கொள்ளாதவர்களை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்;

- DIRECTOR -

266/1, Stanley Road, Jaffna. (றெயில்வே கடவை அருகில்)

No. 7, Palaly Road, Jaffna.

(கி- 2452)


# மரண அறிவித்தல்

## கார்த்திகேசு யோகேந்திரன்

(யோகர்- பயண முகவர், சவூதிஅரேபியா, பொறியியலாளர், சவூதிஅரேபியா)

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு யோகேந்திரன் நேற்று முன்தினம்செவ்வாயன்று (04 09. 2001) கொழுமபில காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு நாகம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு. திருமதி. குமாரசாமி (உடையாா) தம்பதிகளின் அன்புப் பெறா மகனும், சுலோசனாவின் [இந்தியா] அன்புக் கணவரும், சுட்டி [இந்தியா], சுதா [கொழும்பு] ஆகியோரின் அன்புத தகப்பனாரும, கா. குலேந்திரன், திருமதி. சரோஜினி திருநாவுக்கரசு [திருச்சி], திருமதி. ருக்மணிதேவி சிவானந்தன் [திருச்சி] ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருநாவுக்கரசு [சவூதி], சிவானந்தன் [ஓமான்], சரஸ்வதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை வெள்ளிக்கிழமை (07. 09. 2001) கல்கிசை மந்த மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள, அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குறிப்பு:- அன்னாரின் மறைவு குறித்த நன்றி செலுத்தும் ஆராதனை வெள்ளியன்று மாலை 5 மணிக்கு (07. 09. 2001) நெடுந்தீவு தென்னிந்தியதிருச்சபையில் இடம்பெறும்

தகவல்;

புலவர். ஏ. டபிள்யூ. அரியநாயகம்,
மைத்துனர்
ஜே. பி. யூ. எம்,
தலைவர், பிரதேச சபை, நெடுந்தீவு.

கொழும்பு முகவரி:
579/ 1 காலி வீதி,
வெள்ளவத்தை,

(C/ 2455)

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு. யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 06-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.